பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் கிளை நூலகம்

Registered as a Newspaper பக்கங்கள்: 6 விலை ரூபா 5.00

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி PEOPLES DAILY

நாதம் 5 | திருவள்ளுவர் ஆண்டு 2025 | ஆனி 04 | 18 - 06 - 94 | சனிக்கிழமை | ஓசை 120

## போதிய உணவு, சுகாதாரமின்மை; தினமும் 34,000 பிள்ளைகள் மரணம்

உலகில் வளர்முக நாடுகளில் சுமார் எண்பது கோடி மக்களுக்கு இன்னமும் போதியளவு உணவும், சுகாதார வசதிகள் போதிய அளவு கிட்டுவதில்லை எனவும் இதனால் தினமும் சுமார் 34,000 இளம் பிள்ளைகள் மரணித்து வருவதாகவும் மானிட அபிவிருத்தி சபையின் செய்திக் குறிப்பு தெரிவிக்கிறது. இந்த உலகில் இத் துன்பங்கள் ஒரு புறமிருக்க எயிட்ஸ் என்ற ''ஆட்கொல்லி'' நோயின் உருவத்தில் ஒரு புதிய ஆபத்து இப் போது தலைதூக்கியுள்ளது. இந்த கொடிய நோய் மூன்றாவது மண்டல நாடுகளில் குறிப்பாக ஆபிரிக்காவிலும், ஆசியாவின் சில பகுதிகளிலும் மிகத் தீவிரமாகப் (6ஆம் பக்கம் பார்க்க)

## மாவின் விலை கிலோவிற்கு ரூபா 1.50ஆல் குறைப்பு

கூட்டுறவு மொத்த விற்பனவு நிலையம் மாவின் விலையை ஒரு ரூபா ஐம்பது சதத்தால் குறைத்துள்ளது. 1993 ஆம் ஆண்டைவிட குறைந்த விலையில் கூட்டுறவு மொத்த விற்பனவு நிலையம் மாவைக் கொள்வனவு செய்யக் கூடியதாக உள்ளதால் இவ் விலைக்குறைப்பு மேற்கொள்ளப்படுவதாக அறிவிக்கப்படுகிறது.

கெப்பிட்டிக் கொல்லாவவில்

## பலியான பொலிசார் ஆறு பேர் என அறிவிப்பு

அநுராதபுர மாவட்டம் கெப்பிட்டிக் கொல்லாவ பொலிஸ்முகாம்மீதுகடந்தபுதனன்று இரவு 12.45 மணியளவில் வ்டுதலைப் புலிகள் நடாத்திய தாக்குதலில் 6 க்கு மேற்பட்ட பொலிசார் கொல்லப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இத் தாக்குதலின் போது பொலிஸ் முகாம் முற்றாகக் கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டதுடன் அங்கிருந்த மின் பிறபாக்கி (ஜெனரேட்டர்) ஒனறும் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டு தகர்த்தழிக்கப்பட்டது.

இவ் வெற்றிகர தாக்குதலில் விடுதலைப் புலிகள் தரப்பில் சேதம் எதுவுமில்லை.

## புலிகள் கைப்பற்றிய ஆயுதங்கள்

அநுராதபுரம் மாவட்டம் கெப்பிட்டிக் கொல்லாவ எனற இடத்தில் அமைந்திருந்த பொலிஸ் காவலரண் மீதான தாக்குதலில் விடுதலைப் புலிகளால் பெருமளவு ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன அவற்றின் விபரம் வருமாறு;

| | | |
|---|---|---|
| ★ ரி-81 எல். எம். ஜி. | — | 01 |
| ★ அதற்குரிய மகசீன் | — | 04 |
| ★ கோல்சர் | — | 03 |
| ★ அல்டிமக்ஸ் எல். எம். ஜி. | — | 01 |
| ★ அதறகுரிய மகசீன் | — | 01 |
| ★ ரி-56-1 ரக துப்பாக்கிகள் | — | 06 |
| ★ அதர்குரிய மகசீன் | — | 46 |
| ★ ரிப்பீட்டர் துப்பாக்கிகள் | — | 04 |
| ★ தோட்டா | — | 66 |
| ★ 40 மி. மீ. செல் | — | 06 |
| ★ 5.56 மி. மீ. ரவைகள் | — | 240 |
| ★ நடுத்தர ரவைகள் | — | 7085 |
| ★ ஏ. கே. கோல்சர் | — | 13 |
| ★ மொபைல் செற் | — | 01 |
| ★ அதற்குரிய அன்ரனா | — | 01 |
| ★ தண்ணீர்க்கான் | — | 01 |
| ★ தண்ணீர்க்கான் கோல்சர் | — | 04 |
| ★ ரி-56 கிளீனிங் செற் | — | 02 |
| ★ பொறின் கைக்குண்டு | — | 06 |
| ★ பராலைட் | — | 03 |
| ★ கிற்பாக் | — | 11 |
| ★ மழைக் கவசம் | — | 01 |
| ★ பற்றி | — | 01 |
| ★ போலிக் குண்டு | — | 01 |
| ★ மைக்கிறோபோன் | -- | 01 |

வடக்கு-கிழக்கு மாகாணங்களில்

## அமைச்சரவையில் மாற்றம்; விரிவாக்கம்

# காமினி, ரொனிக்கு பதவிகள்;

# அநுராவிற்கு புதிய அமைச்சு

## பொதுநிர்வாக அமைச்சு டி. பியிடம்

[கொழும்பு]

ஜனாதிபதி விஜேதுங்காவினால், சிறிலங்கா அமைச்சரவையில் நேற்று மாற்றமும், சிறிய விரிவாக்கமும் மேற் கொள்ளப்பட்டது. அமைச்சர்கள் பதவி மாற்றம் செய்யப்பட்டதோடு. காமினி திசாநாயக்காவிற்கும், ரொனி டி மெல்லுக்கும் அமைச்சர் பதவிகள் வழங்கப்பட்டன. இதே சமயம், தேசிய இணக்க விவகாரத்திற்கான அமைச்சு அரச நிறுவனங்களை மக்கள் மயப்படுத்தும் அமைச்சு, என இரு புதிய அமைச்சுக்களும் உருவாக்கப்பட்டன. இதே சமயம், போது நிர்வாக அமைச்சை ஜனாதிபதி டி. பி. தன்னிடம் எடுத்துக் கொண்டுள்ளார்.

காமினி திசாநாயக்கா மகாவலி அபிவிருத்தி அமைச்சராகவும், ரொனிடிமெல் துறைமுக கப்பல் துறைஅமைச்சராகவும்நேற்று ஜனாதிபதி விஜேதுங்கா முன்னிலையில் பதவி ஏற்றனர். அரச நிறுவனங்களை மக்கள் மயப்படுத்தும் புதிய அமைச்சிற்கு ஜோசப் மைக்கல்பெரேரா நியமிக்கப்பட்டார். பெஸ்டஸ் பெரேரா கடற்தொழில்நீரியல்வளஅமைச்சராக பதவி ஏற்றார். இவர் இதுவரை வகித்துவந்த பொது நிர்வாக அமைச்சர் பதவியை ஜனாதிபதி விஜேதுங்கா தன்பொறுப்பில் ஏற்றுள்ளார்.

காமினி அத்துக் கொறள வனவள நீர்ப்பாசன அமைச்சராக பதவி ஏற்றார் முன்னர் அவர் வகித்த மகாவலி அமைச்சு பொறுப்பு காமினி திசாநாயக்காவிற்கு வழங்கப்பட்டதுகுறிப்பிடத்தக்கது. எச். எம்.ஏ. லொக்குபண்டா மகாவலி திட்டமுருத்திட்ட அமைச்சராக பதவி ஏற்றார்.

தேசிய இணக்க விவகார அமைச்சு என்ற புதிய பதவி ஒன்று உருவாக்கப்பட்டு அவ்வமைச்சுபொறுப்பையும் உயர் கல்வி அமைச்சர் அநுராபண்டார நாயக்கா ஏற்றுக்கொண்டார் இதன்படி அநுரா

## அமைச்சரவை மாற்றத்தை ஏற்காத

வடக்கு-கிழக்கு மாகாணங்களில்

# ஜனாதிபதித் தேர்தலை தடுக்க விடுதலைப் புலிகளால் முடியும்

வடக்கு-கிழககு மாகாணங்களில் ஜனாதிபதித் தேர்தலை தடுப்பதற்கு விடுதலைப் புலிகளால் முடியும் என ரொய்ட்டர் செய்தியாளர் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் நவம்பர்மாதம் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலை நடக்கவிடாது தடுக்க இவர்களால் முடியும். அரசியல் யாப்பில் நாடு முழுவதும் தேர்தல் ஒரே சமயத்தில் நடைபெற வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

எனவே நாடு முழுவதும் தனது கட்டுப்பாட்டில் இல்லாத நிலையில் எவ்வாறு ஜனாதிபதித் தேர்தலை நடத்த முடியும்? என ரொய்ட்டர்' செய்தியாளர் கேள்வி எழுப்பினார்.

# தொண்டமானின் தீர்வுத்திட்டம்; சந்திரிகாவுடன் பேச்சுவார்த்தை

இலங்கையின் இனப் பிரச்சினைக்கு தீர்வொன்றை ஏற்படுத்தும் நோக்குடன் இலங்கை முஸ்லிம் காங்கிரசும் தொழிலாளர் காங்கிரசும் இணைந்து தயாரித்துள்ள தீர்வுத் திட்டம் தொடர்பாக மிக விரைவில் மேல் மாகாண சபை முதல்அமைச்சர் சந்திரிகா குமாரணதுங்காவுடன் பேச்சு வார்த்தைகள் நடைபெறவுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இவ்வார இறுதிக்குள் நடைபெறவுள்ள மேற்படி பேச்சுவார்த்தைகளுக்கு முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் எம். எச். எம். அஷ்ரப் தலைமை தாங்குவார் என தெரிய வந்துள்ளது.

இதேவேளை எதிர் காலத் தேர்தல் தொடர்பாகவும் இதில் கட்சிகளின் நிலைப்பாடு தொடர்பாகவும் விரிவாக ஆராயப்பட இருப்பதாகவும் பரவலாகநம்பப்படுகின்றது.

## குருதி அவசர தேவை

யாழ். போதனா மருத்துவமனையில் சிகிச்சைக்களம் 12இல் சிகிச்சை பெறும் சிறுமி ஒருவருக்கு மிகவும் அவசரமாக AB நெகட்டிவ் குருதி தேவைப்படுகின்றது.

கருணை உள்ளம் கொண்டோர் குருதிக் கொடையளிக்க யாழ். போதனா மருத்துவமனை நோயாளர் நலன்புரிச் சங்கத்தில் தொடர்பு கொள்ளும்படி நோயாளர் நலன்புரிச் சங்கம் கேட்டுள்ளது.

## மந்திரி பதவிகிட்டாததால் ஜெயவிக்கிரம விரக்தி

### பா. உ. பதவியை துறக்கவும் முயற்சி

(கொழும்பு)

தேசிய பட்டியல் மூலம் பாராளுமன்றத்திற்கு சென்ற முன்னாள் வடமேல்மாகாண சபை எதிர்க்கட்சி தலைவர் காமினி ஜெயவிக்கிரம பெரேராவுக்கு நேற்று நடைபெற்ற அமைச்சரவை மாற்றத்தின் போது அமைச்சர் பதவி வழங்கப்படவில்லை.

இதனைத்தொடர்ந்துஇவர் விரக்தி அடைந்த நிலையில் காணப்பட்டார் என கொழும்பு அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இதனால் இவர் பாராளுமன்ற உறுப்பினர் பதவியை துறக்கவும் முற்பட்டாராம் இவர் கட்சியைவிட்டு வெளியேறாது

(6 ஆம் பக்கம் பார்க்க)

## தொழில் நிறுவனத்தில் வெடிகுண்டு கண்டுபிடிப்பு

(கொழும்பு)

கொழும்பில்பாரியதொழில் நிறுவனமொன்றில் வைக்கப்பட்டிருந்த வெடிகுண்டொன்று கண்டுபிடிக்கப்பட்டு செயலிழக்கச் செய்யப்பட்டதாக பொலிசார் தெரிவித்துள்ளனர்,

கொழும்புதெமட்டக்கொட சிறிதன்னல மாவத்தையில் உள்ள இத் தொழில் நிறுவனத்தின் ஒரு பகுதியில் இவ் வெடிகுண்டு மறைத்து வைக்

( 6 ஆம் பக்கம் பார்க்க)

# அமைச்சரவை மாற்றத்தை ஏற்காத அமைச்சர் அலுவிகார பதவி நீக்கம்

(கொழும்பு)

நேற்று ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா மேற்கொண்ட அமைச்சரவை மாற்றத்தின் போது துறைமுகங்கள் கப்பல் போக்குவரத்து அமைச்சர் அலுத் அலுவிகார அமைச்சரவையில் இருந்து நீக்கப்பட்டுள்ளார்.

அலுத் அலுவிகார வகித்து வந்த அமைச்சர் பதவி ரொனி டிமெல்லுக்கு வழங்கப்பட்டதைத் தொடர்ந்து வேறெந்த அமைச்சையும் பொறுப்பேற்க இவர் மறுத்ததையடுத்தே இவர் அமைச்சரவையிலிருந்து நீக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

எனினும் இவருக்கு 'கபினற்' அந்தஸ்து இல்லாத அமைச்சர் பதவியொன்று வழங்கப்பட்டதாகவும் இதனை அவர் ஏற்க மறுத்ததையடுத்தே இவர் பதவி நீக்கம் செய்யப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை ஐ. தே. கவைச் சேர்ந்தரும் மாத்தளை மேயராக பதவி வகித்து வந்தவருமான ரட்மாஹூசைனின் கொலை தொடர்பாக அலுத்

(6ஆம் பக்கம் பார்க்க )

கல்வி அமைச்சர் அநுரா பண்டாரநாயக்கா ஏற்றுக்கொண்டார் இதன்படி அநுரா உயர் கல்வி, தேசிய இணக்க விவகார அமைச்சராக பதவிப் பிரமாணம் செய்து கொண்டார்.

## இன்று படகுச்சேவை

கிளாலி - பூநகரி படகுச் சேவை இன்று வழமையான நேரத்திற்கு நடைபெறும் என அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர்.

## என்னுடன் ஆலோசிக்காது தந்தபதவி தேவையில்லை

### அலித் அலுவிகார தெரிவிப்பு

(கொழும்பு)

என்னிடம் கலந்தாலோசனை செய்யாமல் எனக்கு வழங்கப்பட்ட அமைச்சர் பதவியை நான் ஏற்க தயாராக இல்லை என சிரேஷ்ட ஐக்கிய தேசிய கட்சி உறுப்பினரும் பதவியிழந்த அமைச்சருமான அலித் அலுவிகார தெரிவித்துள்ளார்.

அமைச்சரவை மாற்றத்தை தொடர்ந்து இவர் நடத்திய பத்திரிகையாளர் மகாநாட்டிலேயே மேற்படி கருத்தை தெரிவித்துள்ளார். அவர் தொடர்ந்து தெரிவிக்கையில், நேற்று முன்தினம் மாலை 5.30 மணிக்கு ஜனாதிபதி செயலாளர் கே. எச். ஜீ.

(6 ஆம் பக்கம் பார்க்க)

## அமைச்சரவை மாற்றம் மேலும் இடம்பெறும்

(கொழும்பு)

சிறிலங்காவின் அமைச்சரவையில் மேலும் சில மாற்றங்கள் விரைவில் மேற்கொள்ளப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இம்மாற்றத்தின் போது தேர்தலில் தம்மை ஆதரிக்கக்கூடியவர்களுக்கு முக்கிய அமைச்சுகளை ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா வழங்குவார் என கொழும்பு அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

# வெளிநாட்டுப் பயண உணர்வை ஏற்படுத்திய யாழ்ப்பாண விஜயம்

### -பி. பி. ஸி. செய்தியாளர் ஜோர்ஜ் ஆர்னி

(கொழும்பு)

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் செல்வது கிட்டத்தட்ட ஒரு வெளிநாட்டுப் பயணம் போன்றது. இவ்வாறு பி. பி. ஸியின் கொழும்பு முகவராக பொறுப்பேற்றிருக்கும் ஜோர்ஜ் ஆர்னி கூறியுள்ளார். தனது முதலாவது யாழ்பபாணப் பயணத்தை முடித்துக்கொண்டு கொழும்பு திரும்பியுள்ள அவர் யாழ்ப்பாணப் பயணம் பற்றி மனதில் பதிந்தவற்றை பி.பி.ஸிக்கு தெரிவிக்கையில் மேலும் கூறியதாவது:

பயணம் தொடங்குவதற்கு முன்னரேயே சிறிலங்கா மண்ணை விட்டுப் போகிறோம் என்ற உணர்வு ஏற்பட்டு விடுகிறது. பற்றறி முதல் பிஸ்கட் வரை தடை செய்யப்பட்ட பொருட்கள் எடுத்துச் செல்லப்படுகிறதா என்பதை அறிய சுங்க அதிகாரிகள் துருவித் துருவி சோதனை செய்கின்னர்.

குடாநாட்டின் அன்றாட நிர்வாகத்தில் பெரும்பகுதி இப்போது விடுதலைப் புலிகளின் பொறுப்பிலேயே இருக்கிறது.

சிவில் நிர்வாகத்தில் போராளிகள் பெரும் பொறுப்புகளை ஏற்பதற்கு வசதியாக சட்டக்கல்லூரி, பொறியியல்' மருத்துவக் கல்லூரிகளில் போராளிகள் பயிற்றப்பட்டு வருகின்றனர். இது விடுதலைப் புலிகளின் புதிய கொள்கை. காலவரையறையின்றி நாங்கள் காத்திருக்க முடியாது. நாங்கள் எங்கள் நிர்வாக அமைப்பை சீரான முறையில் பலப்படுத்தியும் விரிவு படுத்தியும் வருகின்றோம். இந்தப் போராட்டம் காலவரையறையின்றி நீடித்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

**ஏழு தலைமுறைகள்**

வெள்ளையர்கள் புரிந்த கொடுமைகளுக்கும் அக்கிரமங்களுக்கும் எதிராக கறுப்பின அடிமைகள் நடத்திய போராட்டத்தையும், கறுப்பின மக்களின் கலாச்சாரத்தையும் விபரிக்கும் நாவல் விற்பனையாகிறது- வசந்தம், தமிழ்த்தாய் புத்தகசாலைகளில். (8567)

**தவறிவிட்டது**

13.6.94 அன்று இணுவில் கந்தசாமி கோவிலுக்கும் சைவமகா வித்தியாலயத்திற்குமிடையில் ச. ஜெயக்குமாரி என்பவரின் நிவாரண உணவு முத்திரையும், மண்ணெண்ணெய் அட்டையும் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து கிளை 14, இணுவில் ப. நோ. கூ. சங்கத்தில் ஒப்படைக்கவும். (8597)

## நல்லெண்ணெய் உற்பத்தி

முல்லை மாவட்ட கருவேலன் கண்டல் என்னும் இடத்தில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனக் கைத்தொழிற் பகுதி எண்ணெய்ச் செக்கு அமைத்து நல்லெண்ணெய் உற்பத்தியில் ஈடுபட்டு வருகின்றது.

இந்த எண்ணெய்ச் செக்குக்கு வேண்டிய எள் இந்த மாவட்டத்திலும், வவுனியா மாவட்டத்திலும் ஏராளமாகக் கிடைப்பதனால் இத்திட்டம் வெற்றிகரமாகச் செயற்பட்டு வருகின்றது.

## யுனிசெப் உதவி

(நமது நிருபர்)

யாழ் மாவட்டத்தில் இடம்பெயர்ந்து முகாம்களில் தங்கியுள்ள பாடசாலைச் சிறார்களுக்கு யுனிசெப் நிறுவனம் 2 ஆயிரம் உபகரணப் பொதிகளை வழங்கவுள்ளது.

தமிழ்மொழி மூல மாணவர்களுக்கான பாடசாலை உபகரணப் பொதிகளில் 7, 500 பொதிகள் ஆரம்ப பாடசாலை மாணவர்களுக்கும் மிகுதி 1,500 பொதிகளும் ஏனைய மாணவர்களுக்கும் வழங்கப்படவுள்ளன. மேற்படி நிறுவனம் ஏற்கனவே 7,000 பொதிளை மாணவர்களுக்கு வழங்கியிருந்தது தெரிந்ததே.

தற்போது அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையம் வழங்கிய தரவுகளின் அடிப்படையில் இந்த பொதிகள்

## பிரேமா குடும்பத்தினரும் சிலை அமைக்கின்றனர்

### பிரேமதாசாவின் புதிய சிலை 23 இல் திறப்பு

(கொழும்பு)

மறைந்த ஜனாதிபதி பிரேமதாசாவின் உருவச்சிலை ஒன்றை குருநாகலை அபன்பொல தோட்டத்தில் பிரேமதாசா குடும்பத்தினர் எதிர்வரும் 23ஆம் திகதி திறந்து வைக்கின்றனர். பிரேமதாசாவின் பிறந்ததினத்தையொட்டி இது திறந்து வைக்கப்படுவதாக ஹேமா பிரேமதாசா தெரிவித்தார்

ஏற்கனவே அலுத்கடை சென் செபஸ்தியன் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள பிரேமதாசாவின் சிலை தொடர்பாக பிரேமா குடும்பத்தினர் அதிருப்தி கொண்டிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. மேதினத்தன்று திறந்து வைக்கப்பட்ட இச்சிலை திறப்பு விழாவிற்கு பிரேமதாசா குடும்பத்தினர் செல்லவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## வெற்றியீட்டிய வீரர்கள்

(தொல்புரம்)

சங்கானை கல்விக் கோட்ட மட்ட பாடசாலைக்கு இடையிலான மெய்வன்மைப் போட்டிகள் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற போது போட்டிகளில் பங்குபற்றி வெற்றியீட்டிய முதன்மை வீரர்கள், வீராங்கனைகளின் விபரம் வருமாறு:

15 வயதின் கீழ் ஆண்கள் தி. செந்தூரன் சுழிபுரம் விக்ரோறியாக்கல்லூரி 17 வயதின் கீழ் ஆண் எம். தவச்செல்வம் வட்டு திருநாவுக்கரசு வித்தியாசாலை, 19 வயதின் கீழ் ஆண் ஆர். சிறிதரன் வட்டு யாழ்ப்பாணக் கல்லூரி.

15 வயதின் கீழ் பெண்கள் ஆர். றசிந்தா வட்டு யாழ்ப்பாணக்கல்லூரி, 17 வயதின் கீழ் பெண்சி. சிவதர்சினி சுழிபுரம் விக்ரோறியாக்கல்லூரி, 19 வயதின் கீழ் பெண் ஏ. வினோதினி வட்டு யாழ்ப்பாணக்கல்லூரி. (41)

## பீடைமுகாமை வேலைப்பட்டறை

(நமது நிருபர்)

பீடை முகாமைத்துவம் பற்றிய வேலைப்பட்டறை ஒன்று எதிர்வரும் 23-ம் திகதி கந்தர்மடம் பல்துறைப் பயிற்சி நிலையத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணைய விவசாய ஒருங்கிணைப்பு குழு ஆதரவில் நடத்தவுள்ள இவ் வேலைப்பட்டறை காலை 9 மணி முதல் நடைபெறும்.

இதன் போது பாரம்பரிய பீடை முகாமைத்துவ வழிமுறைகளைப் பின்பற்றல் கிருமி நாசினிகளைப் பயன்படுத்துவதன் மூலம் ஏற்படும் விளைவுகள்பற்றிய அனுபவப் பகிர்வுகள் இடம் பெறவுள்ளன.

விவசாயத்துறையில் ஈடுபட்டுள்ள அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களையும், தெரிவு செய்யப்பட்ட விவசாயிகளையும் உள்ளடக்கியதாக இப்பட்டறை நடைபெறவுள்ளது. (ச)

## மாபெரும் கண்டன ஊர்வலம்

சிறிலங்கா அரசின் விமானக் குண்டுவீச்சைக் கண்டித்து 21/6/94 அன்று கூட்டுறவாளர்களால் நடாத்தப்படும் கண்டன ஊர்வலத்தில் அனைத்து கூட்டுறவுச் சங்கங்களினதும் பணிப்பாளர்கள், அங்கத்தவர்கள், பணியாளர்கள் அனைவரும் அணிதிரளுமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

**"சிங்கள தடைகளை வெல்வோம்."**

**'சுதந்திர தமிழீழத்தை அமைப்போம்"**

செயலாளராக செல்லச்சாமி

## அங்கத்தவர் விரும்பாவிடின் பதவியில் இருக்கமுடியாது

(கொழும்பு)

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் பொதுச்செயலாளர் எம் எஸ் செல்லச்சாமியை தொடர்ந்து பொது செயலாளராக வைத்திருக்க காங்கிரஸ் அங்கத்தவர்கள் விரும்பாதுவிட்டால் நீதிமன்றம் அவரை அப்பதவியில் தொடர்ந்து வைத்திருக்க முடியாது என கொழும்பு மாவட்ட நீதிபதி என். எம். சோமவன்ச தெரிவித்துள்ளார்.

## நிருவாக சேவைக்கு ஆட்சேர்ப்பு நடைபெறும்

(கொழும்பு)

இலங்கை நிருவாக சேவைக்கு ஆட்சேர்ப்பு நடைபெறவுள்ளது. இதற்கான மட்டுப்படுத்தப்பட்ட திறந்த போட்டிப் பரீட்சைகள் எதிர்வரும் ஆகஸ்ட் 13-ம், 27-ம் திகதிகளில் நடத்தப்படும்.

இதற்கான விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதி 1994ஜூலை மாதம் 15ஆம் திகதியாகும் வடபகுதி பரீட்சார்த்திகள் தத்தமது விண்ணப்பப் படிவங்களை அரச அதிபர்கள் ஊடாக அனுப்ப ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இப்பரீட்சை தொடர்பான மேலதிக விபரங்கள் விரைவில் வெளியிடப்படவுள்ளன.

## ஆயுர்வேத சிகிச்சை

(தொல்புரம்)

வலிமேற்கு பிரதேச சபை அராலி உப அலுவலகத்திற்கான இலவசசித்த ஆயுர்வேதவைத்தியசாலைக் கிளை நாளை காலை 10 மணியளவில் அராலிகரப்பிட்டி பிள்ளையார் கோவிலுக்கு அருகாமையில் திறந்து வைக்கப்படவுள்ளது.

மேற்படி வைத்தியசாலையை வலிமேற்கு பிரதேச சபையின் விசேட ஆணையாளரும், மேலதிக அரசாங்க அதிபருமான திரு. கா.சந்திரராசா சம்பிரதாய பூர்வமாக திறந்து வைப்பார். (41)

## விளையாட்டிலும் ஆர்வம் தேவை

(தொல்புரம்)

''மாணவர்கள் கல்வியோடு, விளையாட்டுத்துறையிலும் ஆர்வம் கொண்டவர்களாக திகழும் போதுதான் சிறந்த மாணவர் சமுதாயமாக பரிணமிக்க முடியும்.''

இவ்வாறு அண்மையில் நடைபெற்ற சங்கானை கல்விக் கோட்டமட்ட பாடசாலைகளுக்கு இடையிலான மெய் வன்மைப் போட்டிகளின் போது தலைமை வகித்து உரையாற்றிய கோட்டக் கல்விப் பணிப்பாளர் திரு.ப. விக்கினேஸ்வரன் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் இந்த போட்டிகளின் போது பங்குபற்றிய பாடசாலைகளின் மாணவர்கள் மிக்க ஆர்வத்துடன் விளையாடியதை என்னால்

## பரீட்சை

திறந்த பல்கலைக்கழகத்தில் விஞ்ஞான பட்டமாணி 1994 தரப்படுத்தல்பரீட்சை கற்கை நெறிக்கான கணித, ஆங்கில தரப்படுத்தல் பரீட்சை எதிர்வரும் 26 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணி முதல் பிற்பகல் 1.00 மணி வரை யாழ் பிராந்திய நிலையத்தில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## நிறைவு விழா

வலிகாமம் தென்மேற்குப் பிரதேச செயலகத்தினால் கடைப்பிடிக்கப்படும் சுகாதார வாரத்தினையொட்டிய நிறைவுநாள் விழா வெகு சிறப்பாக நடைபெறவுள்ளது.

மேற்படி சுகாதார வார விழா இன்று பிற்பகல் 3மணியளவில் மானிப்பாய் இந்துக் கல்லூரி மண்டபத்தில் பிரதேச செயலர் திரு து.வயித்திலிங்கம் தலைமையில் நடைபெறும். யாழ் மாவட்ட மேலதிக அரச அதிபர் திருமதி ப. திலகநாயகம் போல் சுகாதார சேவைகள் பிராந்தியப் பணிப்பாளர் கலாநிதி என். விவேகானந்தன் பிரதம விருந்தினர்களாகவும், சண்டிலிப்பாய் வட்டப் பொறுப்பாளர் திரு. இளந்திரையன், வைத்திய அதிகாரி திரு. கே. வைத்தீஸ்வரன் உட்பட மற்றும் பலர் கலந்து கொண்டு சிறப்புரை வழங்கவுள்ளனர்.

மேலும் இந்நிகழ்வையொட்டி நடைபெற்ற கவிதை, பேச்சுப் போட்டிகளில் வெற்றியீட்டியோர்க்கு பரிசில்கள் வழங்க

## யாழ். இலக்கிய வட்ட சிறுகதை போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

யாழ். இலக்கிய வட்டம் தனது வெள்ளி விழாவை முன்னிட்டு நடத்திய சிறுகதைப்போட்டியில் பங்குபற்றிய 42 சிறுகதைகளில் 10 சிறுகதைகள் தெரிவாகியுள்ளன.

முதற்பரிசை நடராசா இராமநாதன் எழுதிய வினோத மனிதர்கள், வளவை வளவன் எழுதிய சவுக்காரம் ஆகிய இரு கதைகள் பகிர்ந்து கொள்கின்றன.

இரண்டாம் பரிசை த.ஆனந்தமயில் எழுதிய முருகைகற் பூக்கள், இ. ஜனார்த்தன் எழுதிய விலைகள் ஆகிய கதைகள் பெறுகின்றன.

மூன்றாம் பரிசை ஆறு சிறுகதைகள் பெறுகின்றன. ப. கேதீஸ்வரனின் இரண்டில் ஒன்று, மலரன்னையின் மௌன ஓலங்கள், மெரிஸியா பிரான்சிசின் சுமை தாங்கியின் பாதையில், செல்லக்கண்டு செல்வராசனின் மீனினம், கு. பாலகுமாரியின் நினைப்பதெல்லாம் நடந்துவிட்டால், மகாராஜி மகாதேவாவின் காத்திருக்கிறாள் விடியலுக்காக என்ற சிறுகதைகள் மூன்றாமிடத்தை பெற்றுள்ளன.

## நினைவு கூருகின்றோம்...

### 18-06-1994

1986ஆம் ஆண்டு இதேதினத்தில் தமிழீழக் கடற்பரப்பில் சிறிலங்கா கடற்படையினர் மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய,

**விசாகன்** (சின்னத்தம்பி ராஜு கல்லடி - மட்டு)

**தேவராஜ்** (இன்சான்ட் சில்வெஸ்ரர் ஆனந்தலெம்பேட் - பெரியபண்டிவிரிச்சான் - மன்னார்)

**சூரி** (வேலுப்பிள்ளை ரவி - அரசர்கேணி - பளை)

**லெப். ரவியப்பா** (சோதிலிங்கம் யோகலிங்கம்- சுங்கலாகா ஒழுங்கை, தீருவில் - வல்வெட்டித்துறை)

**2-ம் லெப். மணிமாறன்** (கதிரிப்பிள்ளை பாலசுப்பிரமணியம் - சிவபுரவீதி - வல்வெட்டித்துறை)

**2-ம் லெப். ஆனந்தப்பா** (கந்தசாமி சண்முகானந்தம் - காட்டுப்புலம், தொண்டமானாறு-யாழ்)

**2-ம் லெப். ரகீம் மாஸ்ரர்** (தம்பையா கிருஷ்ணமூர்த்தி - விந்தனை - வல்வெட்டித்துறை)

**2-ம் லெப். அலிப்** (சிறீஸ்கந்தராஜா பாஸ்கரன் - ஆதிகோயிலடி - வல்வெட்டித்துறை - யாழ்)

**சித்தப்பா** (சின்னத்துரை கணேசநாதன் - அராலி மேற்கு, வட்டுக்கோட்டை - யாழ்)

**சேரன்** (சரவணமுத்து சிறீசர்வானந்தா - தீருவில், வல்வெட்டித்துறை-யாழ்)

**சியாம்-ஜியாப்** (அந்தோனிப்பிள்ளை யேசுராசா - 3-ம் குறுக்குத்தெரு - பருத்தித்துறை)

**ஞானி** (சிவசுப்பிரமணியம் கஜேந்திரமூர்த்தி - பொலிகண்டி கிழக்கு, வல்வெட்டித்துறை - யாழ்)

இதே சம்பவத்தின் போது கொல்லப்பட்ட நாட்டுப்பற்றாளரான,

**பிக்கப் ரவி** (-- -- வல்வெட்டித்துறை)

1987ஆம் ஆண்டு திருமலை - சூடைக்குடாப் பகுதியில் சிறிலங்காப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது வீரச்சாவெய்திய-

**லெப். கார்த்திக்** (ஐயாத்துரை சிறிகரன் - 7-ம் வட்டாரம், சம்பூர்-திருமலை)

1989ஆம்ஆண்டு யாழ்-கொல்லங்கலட்டிப்பகுதியில் தேசவிரோதசக்திகளினாற் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமகன்.

1990ஆம் ஆண்டு எதிர்பாராதவிதமாக துப்பாக்கி வெடித்ததில் எமைப்பிரிந்த,

**ஜினேந்திரன்** (-- -- இருதயபுரம் - மட்டு)

வவுனியா - வைரவப்புளியங்குளத்தில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச் சமரின் போது வீரச்சாவெய்திய

வழங்கிய தரவுகளின் அடிப் படையில் இந்த பொதிகள் ஒதுக்கப்பட்டுள்ளன.

இவற்றை கொழும்பிலிருந்து கப்பல்மூலம் எடுத்துவருவதற்கான முயற்சியில் யாழ் அரசாங்க அதிபர் ஈடுபட்டுள்ளார். (ச)

## சுய தொழில் ஊக்குவிப்புக் கடன்

சுயதொழில் முயற்சிகளை ஊக்குவித்து அதனூடாக மக்களின் வாழ்க்கைத்தரத்தினை உயர்த்தும் நோக்கில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் சுயதொழிலுக்கான ஊக்குவிப்பு கடன்களை வழங்கி வருகின்றது.

அந்த வகையில் உடுவில்வட்டத்தில் 30 பயனாளிகளும் சங்கானை வட்டத்தில் 15பயனாளிகளும், சாவகச்சேரி வட்டத் தில் 15 பயனாளிகளும், பருத்தித்துறை வட்டத்தில்27 பயனாளிகளும் நல்லூர் வட்டத்தில் 15 பயனாளிகளும் யாழ் மாவட்டத்தில் 15 பயனாளிகளும் தெரிவு செய்யப் பட்டுள்ளனர். இவர்களுக்கு ரூபா 10,000/- வீதம் சுய தொழிலுக்கான ஊக்குவிப்பு கடன் விரைவில் வழங்குவதற்கு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் நடவடிக்கை எடுத்துவருகின்றது.


## விற்பனைக்கு

கொழும்பு சீமெந்து, வாட்பிளேட்

மொத்தமாகவும், சில்லறையாகவும் மலிவான விலையில்பெற்றுக்கொள்ளலாம்.

C. M. சுகந்தினி
புதி. 309 --157,
K. K. S. வீதி,
யாழ்ப்பாணம்.

(8596)



இல. 14, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாண மாவட்டக்
யாழ்ப்பாணம். கூட்டுறவுச்சபை.

குறிப்பு: ஊர்வலம் ஆரம்பிக்கும் இடம் 20/6/94 அன்று ஈழநாதம் பத்திரிகையின் வாயிலாக தெரியப் படுத்தப்படும். (சி-9820)



### தெல்லிப்பழை, பண்டத்தரிப்பு பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் அங்கத்தவர்களுக்கான

## கலந்துரையாடல்

மேற்படி இரு சங்கங்களின் வருடாந்தப் பொதுக் கூட்டம் கூட்டுதல் தொடர்பான ஆலோசனைக் கூட்டம் கீழ்க்காட்டப்பட்ட திகதிகளில் குறிப்பிட்ட இடங்களில் நடைபெறும் என்பதனை அறியத் தருகின்றோம். அனைத்து அங்கத்தவர்களும் இக்கூட்டத்தில் கலந்து கருத்துக்களை வழங்கிச் சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

### இடம்பெயர்ந்து தென்மராட்சிப் பகுதியில் தொழில் புரியும், தொழில் புரியாத அங்கத்தவர்களுக்கான கலந்துரையாடல்

18-06-1994 (இன்று) காலை 10.30 மணிக்கு சாவகச்சேரி றிபேக் கல்லூரியில் நடைபெறும்.

### வலிகாமம் பகுதியில் இடம்பெயர்ந்து தொழில் புரியும், தொழில் புரியாத அங்கத்தவர்களுக்கான கலந்துரையாடல்

19-06-1994-ல் காலை 10.30 மணிக்கு மானிப்பாய் பிப்பிலி வலிகாமம் கொத்தணிக் காரியாலயத்தின் அருகில் உள்ள கட்டிடத்தில் நடைபெறும்.

(சி-9699)

தெல்லிப்பழை - பண்டத்தரிப்பு
பனை, தென்னை வள
அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள்.


கள் மிக்க ஆர்வத்துடன் விளையாடியதை என்னால் நன்கு அவதானிக்கமுடிந்தது. இந்த நிகழ்வு எமது கல்விக் கோட்டம் ஆரம்பித்து முதலாவது நிகழ்வாகையால் கல்வி கோட்ட வரலாற்றில் முக்கியத்துவமானதும், வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த நிகழ்வுமாகும். இந்த வரலாற்றுச் சிறப்பு இதில் பங்கு பற்றிய அனைவரையும் சாரும். மென்மேலும் நாம் அனைவரும் ஒருங்கிணைந்து கல்வியோடு. விளையாட்டுத் துறையையும் அதி நவீன மயமாக உயர்த்திட ஊக்குவிப்பு நல்க வேண்டும் என தெரிவித்தார். (41)

நடைபெற்ற கவிதை, பேச்சுப் போட்டிகளில் வெற்றியீட்டியோர்க்கு பரிசில்கள் வழங்கப்படும். முதலாம் இடத்தைப் பெற்றவர்களின் நிகழ்ச்சிகளும் இடம்பெறும். அத்தோடு சண்டிலிப்பாய் பிரதேச செயலக பணிமனை அலுவலர் செல்வி அனந்தி சிவசம்புவின் நடன நிகழ்ச்சியும், மேற்படி பணிமனை ஊழியர்கள், கிராம சேவையாளர்களினால் தயாரித்து வழங்கும் சமூக நாடகமான 'அவன் தாறான்' மற்றும் சிறுவர் பாதுகாப்பு நிதியம் வழங்கும் நாடகமும் இந்நிகழ்வில் சிறப்புஅம்சமாக இடம் பெறவுள்ளது. (41)


## 31-ம் நாள் நினைவலைகள்

18 - 06 - 1994



### திருமதி மயில்வாகனம் இராசமணி

(தாவடி)

பிறப்பு: 11 - 11 - 1930

இறைவனடி: 19 - 05 - 1994

மாதம் ஒன்று ஆனாலென்ன
வருடங்கள் தான் சென்றாலென்ன
யுகமே மாறினாலும் எங்கள் அன்புத்
தாயின் அன்பு முகம் எம் நெஞ்சை
விட்டு அகலாது.

சுதுமலை வீதி,
தாவடி.

(8594)

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.



வவுனியா - வைரவப்புளியங்குளத்தில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச்சமரின் போது வீரச்சாவெய்திய,

**மஜித்** (முகமது இஸ்காக் கூப்ஷேக்அரி- மீராவோடை - மட்டு)

**இளங்கோ** (- - - திருமலை)

**மேஜர் தயாபரன்** (கனகசபை சிறிதரன் - இராஜேந்திரன்குளம் - வவுனியா)

கொக்காவில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய,

**நிர்மலன்** (கந்தையா ரமேஸ்கந்தராசா - முரசுமோட்டை - கிளிநொச்சி)

அம்பாறையில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்ட மத்தியமுகாம் 4-ம் குடியிருப்புப் பகுதியைச் சேர்ந்த 2 தமிழிளைஞர்கள்.

மட்டுநகரில் சிறிலங்கா விமானப்படையினர் மேற்கொண்ட விமானத்தாக்குதலில் கொல்லப்பட்ட வாழைச்சேனை - கண்ணகிபுரத்தைச் சேர்ந்த தமிழ்ப் பொதுமகன்.

திருமலை- சீனன்குடாப் பகுதியில் சிறிலங்காப் படையினரால் வெட்டிக்கொல்லப்பட்ட 80இற்கு மேற்பட்ட தமிழர்கள், மற்றும் 13-ம் கட்டைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 2 தமிழர்கள்.

1991ஆம் ஆண்டு மன்னார் - மடுவில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச்சமரின் போது வீரச்சாவெய்திய,

**அசோகன்** (சதாசிவம் பாலகுமார் - முனைத்தீவு - மட்டு)

வவுனியா - குருக்களூரில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச்சமரின் போது வீரச்சாவெய்திய

**லெப். கஸ்ரோ** (குமாரலிங்கம் விமலராசா - 4-ம் கட்டை, அலம்பில்-மணலாறு)

1992-ம் ஆண்டு ஆனையிறவுப் பகுதியில் எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட வெடிவிபத்தில் எமைப் பிரிந்த,

**மதிவண்ணன்-மணிவண்ணன்** (வேலாப்போடி ஜீவரத்தினம் - மண்டபத்தடி-மட்டு)

யாழ் மண்டைதீவிலிருந்து சிறிலங்கா இராணுவத்தினர் ஏவிய எறிகணை வீழ்ந்து வெடித்ததில் வீரச்சாவெய்திய,

**கப்டன் சந்தியா** (யோகேஸ்வரி தேசிங்கம்-கரணவாய்மேற்கு: இமையாணன்-உடுப்பிட்டி)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

**தமிழீழ விடுதலைப்புலிகள்**

(சி-9817)

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் இனி நூலகம்.

# பகிரங்க பேச்சு நடத்தி பிரச்சினைக்கு தீர்வு

## சிறிமாவோ கூறுகிறார்

வடக்கு- கிழக்கு பிரச்சினை ஒரு தேசியப் பிரச்சினை. நாம் பதவிக்கு வந்தால் தமிழ்த் தலைவர்களுடன் பேசி இப்பிரச்சினைக்குத் தீர்வு காண்போம். ஆனால் முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசா நடத்தியது போன்ற இரகசியப் பேச்சாக இது இராது. பகிரங்கமாகவே நாம் பேசுவோம் என திவயின பத்திரிகைக்கு எதிர்க் கட்சித் தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்க வழங்கிய பேட்டியில் தெரிவித்தார்.

வடபகுதி இளைஞர்களினதும் விவசாயிகளினதும் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதன் மூலம் பிரச்சினைக்குத் தீர்வு காணலாம் என தெரிவித்த அவர் வடபகுதி மக்கள் உண்மையில் ஈழம் கோரவில்லை சுதந்திரமாக வாழும் உரிமையையே கோருகின்றனர் என்றார்.

# மா. சபையை கலைத்து தேர்தலை நடத்தட்டும்

## சந்திரிகா குமாரணதுங்கா சவால்


(கொழும்பு)

பிரேமரட்ண குணசேகரவிடம் இருந்து பெறப்பட்ட அமைச்சு பதவிக்கு தகுதியான ஒருவரை மிக விரைவில் நியமிக்க இருப்பதாக மேல் மாகாணசபை முதல் அமைச்சர் சந்திரிகா குமாரணதுங்கா தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் எதிர்க் கட்சி தலைவி வீட்டில் நடைபெற்ற பத்திரிகையாளர் மகாநாட்டில் மேற்படி கருத்தைத் தெரிவித்துள்ளார். அவர் தொடர்ந்து தெரிவிக்கையில் மேல் மாகாண ஆட்சியை ஐ.தே.க. கைப்பற்ற வேண்டும் என நினைத்தால் இம்மாகாணசபையைக் கலைத்துவிட்டு ஒரு தேர்தலை நடத்தி அதன் மூலம் கைப்பற்றுமாறு தான் ஐ.தே.க.வுக்கு சவால் விடுவதாக தெரிவித்துள்ளார்.

தேர்தலில் தோல்வி ஏற்படும் என்ற பயத்தினால் மறைமுகமாக ஆட்சியைக் கைப்பற்ற முயற்சிகள் மேற்கொள்வதாகவும் இதற்கு சிலர் உடந்தையாக செயல்படுவதாக தெரிவித்த அவர் அரசியல் காரணங்களுக்காகவே ஆளுநரைப் பதவி நீக்கம் செய்ததாகவும் குற்றம் சாட்டியுள்ளார்.

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



அமரர்

## திரு. ஆறுமுகசாமி குலசிங்கம்

(தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன யாழ். மாவட்ட வர்த்தகப்பகுதி உதவிச் செயலாளர்)

| மண்ணில்: | விண்ணில்: |
|---|---|
| 28- 04- 1946 | 19- 05- 1994 |

ஆலாக நிழல் தந்து அன்புடன்
பேணி வழிகாட்டிய குடும்பத் தலைவரின்
ஆன்மா இறையதனில் கலந்திட வணங்குகின்றோம்.

இன்று (18- 06- 1994) சனிக்கிழமை எமது இல்லத்தில் இடம் பெறும் ஆன்ம சாந்திக் கிரியைகளிலும் மதிய உணவிலும கலந்து கொள்ளும் வண்ணம் உறவினர்களையும் நண்பர்களையும் அன்புடன் வேண்டுகின்றோம்.

எமது அன்புக்குரிய குடும்பத்தலைவரின் மறைவின் போதும் பின்னரும் உதவிய கரங்களுக்கு எமது அன்பு கலந்த நன்றிகள்.

மஞ்சவனப்பதி வீதி, மனைவி, மக்கள்.
கொக்குவில். (8590)

### திட்டங்களை பார்வையிடலாம்

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் சக்திப் பகுதியினர் நடைமுறைப்படுத்திவரும் திட்டங்களின் மாதிரிகளை மக்கள் பார்வையிடுவதற்கான ஒழுங்குகளை சக்திப்பகுதியினர் மேற்கொண்டுள்ளனர்.

தாவடியிலுள்ள சக்திப்பகுதி அலுவலகத்தில் வைத்தே இத்திட்டச் செயற்பாடுகளை நடைமுறையில் காட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கிழமை நாட்களில் மட்டுமல்லாது விடுமுறைநாட்களிலும் பார்க்கத்தக்க வாறும், பார்வையிடலின்போது விளக்கங்கள் அளிக்கவும் ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

### குழாய்க் கிணறு அமைக்கப்பட்டது

பருத்தித்துறைகம்பவத்தை, கரவெட்டி தலவில் ஆவரங்கால் மகாஜனா வித்தியாசாலை ஆகிய இடங்களில் தேசநிர்மாணிகள் குழாய் கிணறுகளை அமைத்து கைப்பம்பிகளை பொருத்தியும் கொடுத்துள்ளனர்.

பிரமாண அடிப்படையில் மூலதன ஒதுக்கீட்டு நிதியில் மேற்கொள்ளப்பட்ட இந்நடவடிக்கை மூலம் இதுவரை காலமும் இப்பகுதியிலிருந்த குடிநீர்ப் பிரச்சினை குறைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத் தக்கது.

### ஆண்டு நிறைவு விழா

நவீல்ட் செவிப்புலனிழந்தோர் பழைய மாணவர் சங்கத்தின் 27வது ஆண்டு நிறைவு விழாவும் வருடாந்தப் பொதுக்கூட்டமும் இன்று சனிக்கிழமை காலை 8-30

## ஐ.ஐ.தே.மு. கூட்டம் நீதிமன்றம் தடைவிதிப்பு

(கொழும்பு)

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் ஜீ.எம். பிரேமச்சந்திர குழு இன்றுபதினெட்டாம் திகதி முதல் இருபத்தி ஐந்தாம் திகதி வரை நடைபெற இருந்த கட்சியின் பொதுகூட்டத்திற்கு நீதிமன்றம் தடை உத்தரவு பிறப்பித்துள்ளது.

கல்கிசை நீதிமன்றம் மேற்படி கூட்டத்தை தஜூன் முப்பதாம் திகதி வரை ஒத்தி வைக்குமாறு தடை உத்தரவு பிறப்பித்துள்ளது. ஆ.சி. குணரட்ன என்பவரே இத் தடை உத்தரவை வேண்டி வழக்குத் தாக்கல் செய்திருந்தார்.

## தகுதியற்ற பலருக்கு பொலிஸ் பதவி உயர்வு

பொலிஸ் திணைக்களம் அண்மையில் 787 பொலிஸ் கான்ஸ்டபிள்களுக்குபொலிஸ் சார் ஜண்டுகளாக பதவி உயர்வு வழங்கியுளது. இவ்வாறு பதவி உயர்வு பெற்றவர்களில் ஐவர் ஏற்கனவே மரணமாகிவிட்டனர் என்றும், மேலும் பலர் முப்பது வருட சேவையை பூர்த்தி செய்தவர்கள் என்றும், மேலும் சிலர் இருபத்தைந்து வருட சேவையை பூர்த்தி செய்து ஆரோக்கியமற்ற உடல் நிலையை உடையவர்கள் என்றும் தெரியவருகிறது.

## கொழும்பு பங்குசந்தை தொடர்ந்து மந்த நிலையில்

(கொழும்பு)

கடந்த வாரமும் கொழும்பு பங்குச் சந்தையில் மந்தநிலையே காணப்பட்டது. முதலீட்டாளர்கள் மிகக்கவனமுடன் குறித்த தெரிவு செய்யப்பட்ட பங்குகளில் மாத்திரமே முதலீடு செய்துள்ளனர் ஜூன் 10 ஆம் திகதியுடன் முடிவடைந்த வாரத்தில் அனைத்து பங்குகளின் குறிகாட்டி 981-52 ஆக இருந்தது. இது 8.43 புள்ளிகள் ... மந்த நிலை அவதானிக்கப் பட்டது.

### கலந்துரையாடல்

வடமராட்சி கோட்ட கிராமிய உற்பத்திக் குழுக்களுக்கிடையிலான மாதாந்த கலந்துரையாடல் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு (மாலிச்சந்தி) அல்வாய் சின்னத்தம்பி மகா வித்தியாலயத்தில் நடைபெறும். எனவே வடமராட்சிக் கோட்டத்திற்குட்பட்ட

# 31ஆவது நாள் நினைவஞ்சலி



அமரர்

## செல்லப்பா நல்லையா அவர்கள்

(கமலா ஸ்ரூடியோ உரிமையாளர் கிளிநொச்சி)

| மலர்வு: | உதிர்வு: |
|---|---|
| 13 - 03 - 1930 | 20 - 05 - 1994 |

தென்றலது இன்றுவரும் என்றபடி நின்றிருக்க
தீயணைந்த நிலையறிந்தோம்.
முன்றலினில் கோடிசனம் கூடியழ நைந்த மனம்
முன்னிருந்த நிலையறியோம்;
அன்றலர்ந்த உந்தன்முகம் எங்களது சிந்தை தனில்
அகல்வதை என்றும் அறியோம்;
திங்களொன்று செல்லுகையில் சிவனுமை இறைபதம்
சேர்ந்திடப் பரவிடுவோம்.

என்றும் தங்கள் பிரிவால் வாடும்
இல: 8A, கலட்டி அம்மன் வீதி, குடும்பத்தினர்
யாழ்ப்பாணம்:
கமலா ஸ்ரூடியோ
கிளிநொச்சி (8593)

# ஓராண்டு நினைவஞ்சலி

| சேயாய்: | | தெய்வமாய்: |
|---|---|---|
| 28 — 04 — 1981 |  | 18 — 06 — 1993 |

## செல்வி கிறிசாநதி இராசநாயகம்


ஓடி மறைந்ததோராண்டு நெஞ்சம்
உன்னைப் பிரிந்து கலங்குதே ஈண்டு
வாடி நிலை கெட்டுப் போனோம்
உனை எத்தேசத்திலே சென்று
நாம் சேருவோம்.

சொந்தமுகவரி:- உன் நினைவால் வாடும்.
ஊறணி,காங்கேசன்துறை. (8587) தாய்,பேர்த்தி,பூட்டி.

# 41-ம் நாள் நினைவஞ்சலியும்

# 47-ம் நாள் நினைவஞ்சலி

# 47-ம் நாள் நினைவஞ்சலி



அல்வாய் வடக்கு குமுதெனியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட,

அமரர்

## கிருஷ்ணபிள்ளை கந்தையா

**மண்ணுலகில்:** 25 - 07 - 1914

**விண்ணுலகில்:** 03 - 05 - 1994

அன்டமிகு மாமனாரே
பாங்சாய் பழகிடும் பண்பினரே
உழைப்பால் உயர்ந்து பலருக்கு உதவி
உயர வழி கொடுத்தவரே
திடீரென்று மறைந்து சென்றீரோ.

ஆறாத்துயரில் எம்மை ஆழ்த்திவிட்டு மீளாத்துயில் கொண்ட எமது மாமனா'ன் 12-06-94இல் நடைபெற்ற அந்தியேட்டிக் கிரிகையில் பங்குபற்றி சிறப்பித்த அனைவருக்கும் நன்றி கூறுகின்றோம்.

பெறாமகன்:- செ. இரகுநாதன்
மருமகள்:- இ. நவமணிதேவி
பேரப்பிள்ளைகள்:- இராகுலன்
றம்சிகா.

குமுதெனி,
அல்வாய் வடக்கு,
அல்வாய்.

(சி-9815)

---

பொதுக்கூட்டமும் இன்று சனிக்கிழமை காலை 8-30 மணி தொடக்கம் பாடசாலை மண்டபத்தில் தலைவர் திரு. க. இரத்தினேஸ்வரன் அவர்களின் தலைமையில் நடைபெறும்.

இவ்விழாவில் பிரதமவிருந்தினர்களாக யாழ். மாவட்ட அரசியல் பொறுப்பாளர் திரு. இளம்பரிதி அவர்களும், தமிழீழ அரசியல் துறைத்துணைப் பொறுப்பாளர் திரு. கரிகாலன் அவர்களும் கலந்து கொள்ள உள்ளனர்.

## முதலிடம்

யாழ் வலயம் I பிரிவு 2 சிறுவர் நாடகப் போட்டியில் முத்துத்தம்பி மகாவித்தியாலய மாணவர்கள் நடித்த 'நட்பு' நாடகம் 1ம் இடத்தைப் பெற்று யாழ் மாவட்டப் போட்டியில் கலந்து கொள்ள இருக்கிறது.

## பதிவு செய்யவும்

கரப்பந்தாட்டம் (ஓவர் கேம், செற்றப்) ஆடும் சகல கழகங்களையும்யாழ்மாவட்ட கரப்பந்தாட்ட சங்கத்தில் எதிர்வரும் 30 திகதிக்கு முன்னதாகப் பதிவு செய்து கொள்ளுமாறு யாழ் மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழு கேட்டுக்கொள்கின்றது. பதிவு செய்யப்பட்ட கழகங்கள் மட்டுமே வருங்காலத்தில் கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டிகள் நடாத்தவோ, அல்லது சுற்றுப்போட்டியில் பங்குபற்றவோ அனுமதிக்கப்படும். பதிவு செய்வதற்கான படிவங்களை யாழ் மாவட்ட கரப்பந்தாட்ட செயலாளர் திரு. கே. ஏகாம்பரம், இல. 9, இராச வீதி கல்வியங்காடு என்ற முகவரியில் பெற்றுக் கொள்ளலாம்.

---

தது. இது 8.43 புள்ளிகள் வீழ்ச்சியினைக் காட்டுகிறது.

வெளிநாட்டு முதலீட்டாளர்களும் நிதிகளும் மிகக் குறைந்த ஆர்வத்தினையே காட்டியுள்ளன. பொதுவான

றும். எனவே வடமராட்சிக் கோட்டத்திற்குட்பட்ட அனைத்து உற்பத்திக்குழு உறுப்பினர்களையும் தவறாது சமுகமளிக்குமாறு தமிழீழ பொருண்மியமேம்பாட்டு நிறுவனம் அறிவித்துள்ளது.

---

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



தமிழ்த்தாய் கரங்களில்
29- 09- 1967

தமிழர் தம் மனங்களில்
18- 06- 1992

## கப்டன் சந்தியா

(தேசிங்கம் யோகேஸ்வரி)

[கரணவாய் மேற்கு- இமையாணன்]

தாயகம் மீட்பதற்காய்
தலைவனின் வழியில் சென்று
சரித்திரமாய் கோட்டையிலே
சந்தியா நீ சரிந்தாய்.

அன்னையின் மடி வெறுத்தே
அரக்கரின் அரண் அழித்து
சத்திய வேள்வியிலே
சந்தியா நீ சாவடைந்தாய்.

வருடங்கள் சென்றாலென்ன
வையகமே அழிந்தாலென்ன
வரலாற்றின் ஏட்டினிலே - உனை
வார்த்தைகள் வரைந்திருக்கும்.

கரணவாய் மேற்கு,
இமையாணன்.

- குடும்பத்தினர்.

(8583)

---

# 41-ம் நாள் நினைவஞ்சலியும்

# நன்றி நவிலலும்

மலர்வு:- 10 10-1958



உதிர்வு:- 09-05-1994

திருமதி

## மேரி யசிந்தா சூசைப்பிள்ளை

காலஞ்சென்ற திரு. திருமதி பர்னாந்து யோசேப் அவர்களின் அன்புமகளும் காலம் சென்ற திரு. திருமதி பிரகாசம் அவர்களின் அன்பு மருமகளுமாகிய பருத்தித்துறையை பிறப்பிடமாகக் கொண்ட மேரி யசிந்தா சூசைப்பிள்ளை 09-05-1994 அன்று கொழும்பில் காலமானார்.

இவர் சூசைப்பிள்ளையின் (மலேசியா) அன்பு மனைவியும், ஸ்டலின், ஏரனிஸ்லொஸ் (ஜேர்மனி) கொலற் சிறில் (ஆசிரியை திருக்குடும்பக் கன்னியர் மடம் யாழ்ப்பாணம்) டானியல் ஆகியோரின் அன்புச் சகோதரியும் புவனேஸ்வரி, கமலா (ஜேர்மனி) சிறில் (பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அநுராதபுரம்) ஆரோக்கியம்மா, ஆரோக்கியநாதர், அந்தோனியம்மா, அமலஉற்பவநாயகி அன்ரனி (ஆசிரியர் கொழும்பு) பசில்ராஜ்குமார் (சவூதி) கில்டா ஆகியோரின் மைத்துனியும் ஆவார் அன்னாரின் பூதவுடல் கல்கிஸ்ஸ மகிந்த பாளரில் வைக்கப்பட்டு 13-05-1994 வெள்ளிக்கிழமை பி.ப 2 மணியளவில் கல்கிஸ்ஸ சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

அன்னாரின் இறுதிச் சடங்குகளில் கலந்து கொண்டவர்களுக்கும் அனுதாபச்செய்தி அனுப்பியும் எங்கள் துயரத்தில் பங்குகொண்ட உற்றார், உறவினர்கள், நண்பர்கள் மற்றும் அனைவருக்கும் எங்களது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தகவல்:- திருமதி கொலற் சிறில்
54, இராசாவின் தோட்டம்
யாழ்ப்பாணம்.

(8591)

# வரி மூலம் பெறும் ஆயுதங்களை புலிகள் எடுத்துச்செல்கின்றனர்

## சு. க. பொதுச்செயலர் தர்மசிறி சேனநாயக்கா

(கொழும்பு)

அரசாங்கம் இனப்பிரச்சினைக்கு நிலையான தீர்வொன்றை கொண்டு வரும் பொருட்டு அரசியல் தீர்வொன்றை முன்வைக்காது யுத்த தீர்வையேநாடுகிறது என சுதந்திர கட்சி பொது செயலாளர் தர்மசிறி சேனநாயக்கா தெரிவித்துள்ளார்.

வெரித்தாஸ்சிங்கள சேவைக்கு அளித்த விசேட பேட்டி யொன்றில் அவர் மேற்படி கருத்தை தெரிவித்துள்ளார். அவர் தொடர்ந்து தெரிவிக்கையில் அரசாங்கத்தின் இந்த நடவடிக்கையினால் வடக்கு-கிழக்கு மக்கள் மட்டும் அன்றி ஏனைய கிராமப்புற மக்களும் கஷ்டங்கள், துன்பங்களுக்கும் அழிவுகளுக்கும் முகம் கொடுக்கும் நிலை காணப்படுகிறது.

வடக்கு-கிழக்கு யுத்தத்தை அதிகாரிகள் இன்று ஓர்வாணிடமாக கருதி செயல் படுவதினால் இந்த அரசாங்கத்தினால் ஒருநாளும் இவ் யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வர முடியாது.

அரசாங்கம் தனது நடவடிக்கையினால் பலவீனம் அடைந்து இருப்பதினால் விடுதலைப்புலிகள் திடீர்த்தாக்குதல்களை மேற்கொண்டு பல லட்சக் கணக்கான ஆயுதங்களைபறித்துச்செல்கின்றனர். இதனால் விடுதலைப் புலிகள் பலம் அடைகின்றனர்.

இனப்பிரச்சினைக்கு யுத்தத்தினாலே தீர்வுவொன்றை காண முடியும் என கருதும் அரசாங்கம் யுத்தத்தை தொடர்ந்து நடத்துவதற்காக பாதுகாப்பு வரியை அறவீடு செய்கின்றது ஆனால். இவ்வாறு வரி அறவீட்டின் மூலம் பெறப்படும்ஆயுதம்விடுதலைப் புலிகளின் கைக்கு செல்வதன் மூலம் அரசாங்கத்தின் நிலையை நாம் தெளிவாக புரிந்து கொாளலாம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# மேயர் இடை நிறுத்தம் நீதிமன்றம் தடையுத்தரவு

(கொழும்பு)

கொழும்பு மேயர் ரட்ண சிறி ராஜபக்சவை பதவியிலிருந்து இடைநிறுத்தம் செய்யும் மேல்மாகாணசபை உள்ளூராட்சி அமைச்சர் ரட்ண சிறி விக்கிரமநாயக்காவின் வர்த்தமானி அறிவிப்பிற்கு உயர் நீதிமன்றம் இம்மாதம் 23 ஆம் திகதி வரை கட்டுப்பாடு விதிக்கும் உத்தரவை பிறப்பித்துள்ளது இந்த உத்தரவை நீதியரசர் பிறப்பித்தார்.

மேயர் சார்பில் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட விசேட மனுவை பரிசீலித்த நீதியரசர் இவ்வுத்தரவைப் பிறப்பித்தார்.


பருத்தித்துறை, நகராட்சிமன்றம்

ஆட்டிறைச்சிக் கடைக் குத்தகைக்கான

## கேள்வி அறிவித்தல்-1994

மேற்காட்டிய குத்தகை சார்பில் 01-07-1994-ந் திகதி தொடக்கம் 31-12-1994-ந் திகதி வரைக்கான காலப்பகுதிக்குரிய கேள்விகள் 28-06-1994-ந் திகதி நண்பகல் 12.00 மணிவரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விப்பத்திரங்கள் இந்நகராட்சி மன்ற அலுவலகத்தில் 27-06-1994-ந் திகதி பிற்பகல் 3.00 மணிவரை மீளளிக்க முடியாத படிவக் கட்டணம் ரூபா 150/-ம். மீளளிக்கக் கூடிய கேள்வி வைப்புப்பணம் ரூபா, 1000/-ம் பணமாகத் செலுத்துவதன் பேரில் வழங்கப்படும்.

கேள்விப் பத்திரங்கள் இணைப் பிரதிகளில் ''செயலாளர், நகராட்சிமன்றம். பருத்தித்துறை'' என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிடப்பட்டுத் தபாலுறையின் இடதுபக்க மேல்மூலையில் 'ஆட்டிறைச்சிக் கடைக்கான கேள்வி- 1994'' எனத் தெளிவாக எழுதப்பட்டுப் பதிவுக்தபால் மூலம் அனுப்பப்பட வேண்டும். அல்லது இதற்கென இவ்வலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் இடப்பட வேண்டும்.

இக்குத்தகைக்கான ஏற்றுக்கொள்ளப்படக் கூடிய ஆகக் குறைந்த கேள்வித்தொகை ரூபா 7000/- ஆகும்.

இது சம்பந்தமான நிபந்தனைகளையும், மேலதிக விபரங்களையும் அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் அறிந்து கொள்ளலாம்.

க. சண்முகநாதன்
செயலாளர்,
நகராட்சிமன்றம்,
பருத்தித்துறை.

நகராட்சிமன்ற அலுவலக,
பருத்தித்துறை,
16-06-1994 (சி-9818)



1வது பிறந்த நாள் வாழ்த்து

18.06.94



செல்வன் லூக் றொஷான்

விடத்தல்தீவைச் சேர்ந்த சேவியர் - லதா தம்பதிகளின் செல்வப் புதல்வன் லூக் றொஷான் (18-06-94) இன்று தனது முதலாவது பிறந்தநாளை விடத்தல்தீவிலிருக்கும் தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறார். லூக்கை, அப்பா அம்மா, அப்பம்மா, மாமாமார், மாமிமார், மச்சாள்மார், மச்சான்மார், சித்தப்பா குடும்பத்தினர். மன்னாரிலிருக்கும் பெரியப்பா குடும்பத்தினர், மாமி குடும்பத்தினர், பருத்தித்துறையிலிருக்கும் தொட்டப்பா குடும்பத்தினர், நாவாந்துறையிலிருக்கும் தாத்தா, மாமாமார், மாமி. சித்திமார், அண்ணாமார். அக்காமார், மாட்டீன் றோட் அம்மம்மா குடும்பத்தினர், மாட்டீன் றோட்டிலிருக்கும் மச்சான்மார், விடத்தல் தீவிலிருக்கும் மெல்சன் மாமா, பிறின்சிலி மாமா, கில்பேட்மாமா, சுகுணன் மாமா மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் மரியன்னை அருள்பெற்று பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

(8455) கிறிஸ்ரி (மாமா)


திருமலையில் அமையவிருந்த

# சுதந்திர வர்த்தக வலயம் கைவிட அரசு முடிவு

(கொழும்பு)

திருகோணமலையில் சதந்திர வர்த்தக வலயம் நிறுவும் திட்டத்தை அரசாங்கம் கைவிட முன்வந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. திருகோணமலைப்பகுதியில் நிகழும் அமைதியின்மையைக் காரணம் காட்டி வெளிநாட்டு முதலீட்டாளர்கள் அங்கு முதலீடு செய்வதற்கு பின்னிற்பதே இதற்கு காரணம் எனச் சொல்லப்படுகிறது.

திருகோணமலைப் பகுதி பூரண கட்டுக்குள் வந்துவிட்டதாக அரசாங்கம் கூறுகின்றபோதிலும் ஆங்காங்கு தாக்குதல் சம்பவம் இடம் பெற்றுக் கொண்டே வருகிறது. இதுபற்றி முதலில் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் சந்தேகம் கிளப்பி தமது தூதரகங்கள் மூலம் விபரங்களை கேட்டிருப்பதாகதெரிய வருகின்றது.

திருமலை நகர மக்களுக்கு வேலை வாய்ப்பு வழங்குவதற்காக அறுநூறு ஏக்கர் நிலத்தை சுதந்திர வர்த்தக வலயம் நிறுவுவதற்கு அறிவித்துள்ளது.

இந்த அறிவிப்பு வெளிவந்ததை அடுத்து அரசியல் வட்டாரங்களில் பல சந்தேகங்களை ஏற்படுத்தியுள்ளது.

திருகோணமலை நகரப் பகுதி சுதந்திர வர்த்த வலயம் என்றபோர்வையில் வெளியார்மயமாக்க இந்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது என்று இவர்கள் பலரும் அச்சம் தெரிவித்துள்ளனர். இது பற்றி அறிக்கைகளையும் வெளியிட்டு திருகோணமலையில இன விகிதாசாரத்தை கவனிக்காத முறையில் அரசாங்கம் இத்திட்டத்தை அமுல்படுத்த வேண்டுமென தமிழ்க் கட்சிகள் கோரியும் இருந்தன.

உத்தேச சுதந்திர வர்த்தக வலயம் நிறுவப்படும் 600 ஏக்கர் நிலப்பகுதியின் பெரும் பகுதி தமிழர்களுடைய நிலமென்று சுதந்திர வர்த்தக வலயம் ஏற்படுத்தப்படும் போது அவர்கள் அங்கிருந்து வெளியேறவேண்டி ஏற்படுமெனவும் அவை சுட்டிக்காட்டியுள்ளன.

தேர்தல்கள் இங்கு இடம் பெறவிருப்பதால் தமிழர்களின் இடம் பெயர்வு ஆளும் கட்சிக்கு பாதிப்பைஏற்படுத்துமெனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.


காலந் திற்குக் கால புதுமைகள் பல புகுத்தி வீடியோ படத்துறையில் அனுபவம் மிக்க முன்னோடிகளான

★ புலவர் வீடியோ ★

நிறுவனத்தார் மீண்டு புதிதாக அறிமுகப்படுத்துகிறார்கள்

1994 இல் Digital ... Mixer




1994 இல் Digital **AV** Mixer


# WJ-MX 50

## CHROMA KEY VIDEO MIXER

(குறோமா கீ வீடியோ மிக்ஸர்)

## 287 WIPE PATTERNS (287 மாதிரி வடிவங்கள்)





நவீனத்துவம் X கலைத்துவம் - தனித்துவம் - தொழில்நுட்பம் மிக்க
வீடியோ கலப்பு (Mixing) படப்பிடிப்பு

WJ - MX 50 - Production Mixer - (287 Wipe Patterns)

## C-C-D Video Camera-National - Hitachi - Sony-J.V.C.

ஆகிய உலகின் தரம் மிகுந்த கருவிகளின் மூலம் 287 எபெக்ஸ் **MX 50** குறோமா கீ மிக்ஸரில் உங்கள் வாழ்வின் நினைவில் நிறைந்த மங்களகரமான நிகழ்ச்சிகளை நிரந்தர பதிவுகளாக்கி சிங்கப்பூர் மற்றும் வெளிநாடுகளின் இயற்கை வண்ணக்காட்சிகள் சேர்த்து வாழ்நாள் முழுவதும் அதன் உணர்வுகளை அனுபவிக்க வைக்கும் அற்புதக் கலைப்படைப்புக்களாக்கி தருபவர்கள்.

# ★ புலவர் வீடியோ ★

கோண்டாவில் வடக்கு,
கோண்டாவில.

(8578)

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் கிளை நூலகம்



### சிந்தனைக்கு

துளிர்க்கும் புல் ஒவ்வொன்றையும் கண்டு அஞ்சுபவன் புல்வெளியில் நிற்கக் கூடாது.

- ஸேம்யல் பாள்மர்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம். 18-06-1994
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2024
தபால் பெட்டி எண். 05

## இராணுவத்தினரின் குத்துக்கரணம்

அண்மையில் யாழ்ப்பாணம் வந்திருந்த பி. பி. ஸி. மற்றும் ரொய்டர் செய்தியாளர்களுக்கு விடுதலைப்புலிகள் தரப்பினர் அளித்த பேட்டியின்போது நிபந்தனைகள் எதையும் விதிக்காமல் இனப்பிரச்சினைகள் தொடர்பான பேச்சுவார்த்தை நடத்துவதற்கு விடுதலைப் புலிகள் இயக்கம் தயாராக இருக்கின்றது எனத் தெரிவித்துள்ளனர்.

இனப்பிரச்சினை தொடர்பாகப் பேச்சுவார்த்தைகள் நடத்துவதற்கு முன்னரும் விடுதலைப் புலிகள் நிபந்தனை எதையும் விதிக்கவில்லை. ஆயினும் யுத்தநிறுத்தம், பொருளாதாரத் தடைநீக்கம் என்பனவற்றின் மூலம் பேச்சுவார்த்தைக்கான நல்லதொரு சூழ்நிலையை உருவாக்க வேண்டும் எனக் கோரிக்கை விடுத்திருந்தனர். ஆனால், தற்பொழுது அக்கோரிக்கையையும் கைவிட்டு பேச்சுவார்த்தைக்குத் தமது முழு ஒத்துழைப்பையும் தெரிவித்துள்ளனர். சுருக்கமாகக் கூறுவதானால் விடுதலைப் புலிகள் இயக்கம் பேச்சுவார்த்தைக்கான முழுத் தடைகளையும் அகற்றி சமாதானக் கதவுகளை அகலவே திறந்து விட்டுள்ளதெனலாம்.

ஆயினும், இனப்பிரச்சினை குறித்து அரசாங்கத் தரப்பில் இருந்து எதுவித நல்லெண்ண சமிக்ஞையும் வருவதாகத் தெரியவில்லை. விடுதலைப் புலிகள் பி.பி. ஸிக்கு அளித்த பேட்டியின் பின்னர் அரசாங்கம் தனது நிலைப்பாட்டை வெளியிடாவிட்டாலும் அதற்கு ஓரிரு தினங்களுக்கு முன்னரும் கூட புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு நிபந்தனைகள் பற்றிப் பேசியுள்ளது.

ஆனால், அரசாங்கமோ, அரசியல்வாதிகளோ விடுதலைப் புலிகளின் புதிய நிலைப்பாடு பற்றிக் கருத்துக் கூற முன்னர், இராணுவத் தரப்பினர் தமது உணர்வுகளை வெளியிட்டுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. போர்நிறுத்தம் இல்லாமல் விடுதலைப் புலிகள் பேச முன் வந்திருப்பதானது தமக்குச் சந்தேகத்தை அளிப்பதாக அவர்கள் தெரிவிக்கின்றனர்.

இராணுவத்தரப்பின் தற்போதைய நிலைப்பாடானது,

# இலங்கையில் நிலவும் அனைத்து பிரச்சினைகளுக்கும் ஐ. தே. கவே காரணம்

## சிறிமாவோ பண்டாரநாயக்காபேட்டி

(கொழும்பு)

''வடக்கு கிழக்கு இனப் பிரச்சினை ஒரு தேசியப் பிரச்சினை. நாம் ஆட்சிக்கு வந்ததும் தமிழ்த் தலைவர்களுடன் பேசுவோம். முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசா போலல்லாது நாம் பகிரங்கமாகப் பேசுவோம். எமது நாடு ஒரே நாடாக இருக்கவேண்டும். இளைஞர்களினதும், விவசாயிகளினதும்பிரச்சினையை நாம் இலகுவில் தீர்ப்போம். அவர்கள் படித்தவர்கள், புத்திசாலிகள். அவர்களுக்குத் தனிநாடு தேவையில்லை. சுதந்திர மக்களாக வாழ உரிமையே அவர்களுக்குத் தேவை. வடக்கிலும் பெரும்பாலானவர்கள் பௌத்தமதத்தைப் பின்பற்றியவர்கள். இப்போதைய பிரச்சினைக்கு ஐ.தே.கவே காரணம்'' இவ்வாறு திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா நந்தசேனா சூரியாராச்சி எனும் பத்திரிகையாளருக்கு அளித்த பேட்டி ஒன்றில் குறிப்பிட்டுள்ளார்.

கேள்வி: எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளராக நீங்கள் நியமிக்கப்பட்டதற்குஉங்கள் கட்சிக்குள்ளேயே எதிர்ப்புக் கிளம்பியுள்ளது. இதுபற்றி என்ன கூறுகின்றீர்கள்?

பதில்: எனது கணவரின் மறைவைத் தொடர்ந்து நான் கட்சிக்குத் தலைவியானேன். மக்கள் விருப்பப்படியே எனது பொறுப்புக்களை ஏற்றேன். இப்போது எனக்கெதிராகக் கட்சியில் எதிர்ப்புக் கிளம்பியுள்ளதாக வெளியாகும் செய்திகள் முழுப்பொய். எமக்குள் குழப்பம் என்று காட்டச் சில பத்திரிகைகள் முயல்கின்றன. அவை தேசியப் பத்திரிகைகள் அல்ல. அவை அமெரிக்க சி ஐ ஏயின் பணத்தில் இயங்குபவை. எந்த விளம்பரங்களும்இன்றிய பத்திரிகைகள்அவை. எனக்கும் என் மகளுக்கும் இடையில் பிளவு என்கின்றனர். எனக்கு வயதாகிவிட்டதெனவும், சந்திரிகாவை ஜனாதிபதி வேட்பாளராக நியமிக்கும்படியும் கூறுகின்றனர். அவர்கள் எனது அல்லது சந்திரிகாவின் தலைமையை விரும்பவில்லை. ஆனால் அவர்கள் வழமை போல் விரும்புவது சர்வாதிகார ஐ. தே. கவைத்தான்.

கேள்வி: ஐ.தே.க. மீள ஆட்சிக்கு வரமாட்டாது என நீங்கள் கருதுகிறீர்களா?

பதில்: 1977 முதல் ஐ. தே. க. ஆட்சி செலுத்துகின்றது. இக்காலப்பகுதியில் 3 ஜனாதிபதிகள் பதவி வகித்துள்ளனர் இவர்களின் தவறுகளைச் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். ஜனாதிபதி ஜெயவர்தனா ஜே வி பி தலைவர்களை விடுதலைசெய்தமை, நாட்டிற்குப் பேரழிவைத் தந்தது. மூன்றிலிரண்டு பெரும்பான்மைப் பலத்தைக்கொண்டு எனது குடியுரிமை பறிக்கப்பட்டது. யாழ்ப்பாண மக்களின் நூலகம் மாவட்டச்சபைத் தேர்தலின்போது குண்டர்களை வைத்து கொளுத்தப்பட்டது.

கேள்வி: வீதியில் அலையும் குண்டர்களுக்கு நூலகம் பெரியதோர் விடயமல்ல, எழுச்சிக்கு வேறு ஏதும் காரணங்கள் உண்டா?

பதில்: நூலகம் ஒரு தேசிய சொத்து. யாழ்ப்பாண இளைஞர்கள் படிப்பறிவுள்ளவர்கள் நாட்டின் உயர்பதவிகளில் அவர்கள் உள்ளனர் அவர்கள் இனவாதிகளல்ல. தமது பிள்ளைகளின் கல்விக்காலாக இருந்த நூலகம் எரிக்கப்பட்டது தமிழ் மூத்தோர்களின் கோபத்தைக்கிளறியது. 1977 இல் ஐ தே.க அறிமுகப்படுத்திய திறந்த பொருளாதாரம் பல விவசாயிகளை தாக்கியது. யாழ்ப்பாணம் உலர் வலய பிரதேசம் யாழ் விவசாயிகள் கடின உழைப்பாளிகள் அதிகாலையில் எழுந்து தினமும் தமது விவசாய நடவடிக்கைகளை ஆரம்பித்துவிடுவர். ஆழ்கிணறுகளிலிருந்து நீரைப்பெற்று விவசாயம் மேற்கொள்பவர்கள்



உருளைக்கிழங்கு, வெங்காயம், மிளகாய் போன்றவை மட்டுமல்ல, குளிர்வலய செய்கைகளான திராட்சை கோவா, பீற்ரூட், கிழங்கு போன்ற உலர்வலயத்தில் செய்கைபண்ண முடியாத பயிர்களையும் அவர்கள் பயிரிட்டனர் திறந்த பொருளாதாரம் இவர்களின் பொருளாதாரத்தை பாதித்தது கல்வி பொருளாதாரபாதிப்பு கிளர்ச்சியை யாழ். குடாநாட்டினுள் ஏற்படுத்தியது

கேள்வி: வடக்குபிரச்சினைக்கு இது தவிர வேறு ஏதும் காரணங்கள் உண்டா?

பதில்: நிச்சயமாக தமிழர்களுக்கு அளிக்கப்பட்ட வாக்குறுதிகள் மீறப்பட்டன இதனால் அவர்கள் கிளர்ந்தெழுந்தனர் வடக்கில் இன்றைய நிலைமைக்கு ஐ. தே. கவே காரணம்.

கேள்வி: நீங்கள் ஜனாதிபதி வேட்பாளராக தெரிவானபின்னர் உங்களுக்கும் சந்திரிகாவுக்கும் இடையில் ஓர் இணக்க நிலை கண்டுள்ளீர்களா? நீங்கள் ஆட்சிக்கு வந்ததும் சந்திரிகாவிடம் பதவியை ஒப்படைத்துவிட்டு அரசியலில் இருந்து ஓய்வு பெறுவீர்களா?

பதில்: இக்கேள்விக்கு முன்னமே பதிலளித்துவிட்டேன் என எண்ணுகின்றேன் சந்திரிகா என் மகள் என்பது உண்மை அவருக்கு பாரியளவு மக்கள் ஆதரவு உண்டு என்பதும் உண்மை எனக்கும் சந்திரிகாவிற்கும் இடையில் முறுகலை ஏற்படுத்தி ஐ.தே.க அதன் மூலம் லாபம் ஈட்ட சில நடவடிக்கைகளில் சிலர் இறங்கியுள்ளனர் ஒரு சில சந்தர்ப்பங்களில் இந்த பத்திரிகைக்காரர்கள் என்னை சந்தித்து பல மணிநேரம் பேட்டி கண்டிருக்கின்றனர் நான் வெளிப்படையாக சொன்னவற்றை அவர்கள் தவறாக விளங்கியிருந்திருக்கலாம் பின்னர் சந்திரிகாவிற்காக அவர்கள் பிரசாரம் செய்தனர். 30 வருடமாக அரசியலில் இருக்கும் ஒருவருக்கு மக்களை நன்கு புரிந்து கொள்ள முடியும் ஐந்து வருடங்கள் பத்திரிகையாளராக இருக்கும் ஒருவரைவிட சந்திரிகாவிற்கு அதிகம்தெரியும் ஏனெனில் அவர் கற்றவர். அனுபவசாலி. அவர் அரசியல்வாதிகளுடன் பழகியவர் என்பதால் பத்திரிகையாளர்கள் எனக்கும் சந்திரிகாவுக்கும் இடையில் பிளவை தோற்றுவிக்க முயற்சி செய்கிறார் என்பதை அறிந்து கொள்வார்.

கேள்வி: கடந்த 17 வருடகாலத்தில் நாட்டின் சமூக ஒழுக்கப்பாடுகள் குறித்து பல கருத்துகள் கூறப்பட்டன இது குறித்து நீங்கள் என்ன நினைக்கின்றீர்கள்?

பதில்: பத்திரிகைகளை படித்தால் நாட்டின் நிலை தெரியும். பெற்றோர்களை மதிக்கவோ பராமரிக்கவோ மறுக்கும் பிள்ளைகள் உள்ள சகாப்தம் இது. குடும்பஒழுக்கச்சீர்கேடுகள் நிறைந்துள்ளன தரங்குறைந்த ஏடுகள் நடைபாதையில் போட்டு விற்கப்படுகின்றன நாடுமுழுவதிலும் கொலைக்குழுக்கள் இயங்குகின்றன பாதாள உலக குற்றவாளிகள் மீதான விசாரணைகள் இப்போது நின்றுவிட்டன.

போதி பூஜைகள் என்ற பெயரில் நிறுவனங்கள் பணம் கறக்கும் முயற்சியில் இறங்கியுள்ளன பௌத்தசாசனத்தை அழிக்கவென இந்த தாழ்ந்த மட்டத்திற்கு எமது ஆட்சியாளர்கள் சென்று விட்டனர் உயர்மட்டத்தில் உயர்மன நிலை இல்லாத போது ஏனையவர்களிடம் இதை எப்படி எதிர்பார்க்க முடியும்?

# இராணுவ உயர் விருது; கொப்பே, விஜய்க்கு மறுப்பு

வடகொரியா மீதான

## அமெரிக்க தடைத்திட்டம் சீனா, ரஷ்யா எதிர்ப்பு

(வாஷிங்டன்)

அணு ஆயுதப்பிரச்சினை தொடர்பாக வடகொரியா மீது தடை நடவடிக்கை விதி...

...டசவேண்டும் என வடகொரியாவின் நெருங்கிய நட்பு நாடாக விளங்கும் சீனா மீண்டும் வலியுறுத்தியுள்ளது

இராணுவத்தரப்பின்தற்போதைய நிலைப்பாடானது, விடுதலைப் புலிகள் முன்னர்வைத்தகோரிக்கையின்போது இருந்ததை விடத் தலைகீழானதாகும். கடந்த வருடத்தில், போர்நிறுத்தம், பொருளாதாரத் தடை நீக்கம் என்பன பேச்சுவார்த்தை நடத்துவதற்கான சூழ்நிலைக்கு அவசியம் என விடுதலைப் புலிகள் தெரிவித்தபோது, இராணுவத் தரப்பினர், விடுதலைப் புலிகள் பலவீனமாகவுள்ளனர், தம்மைப் பலப்படுத்துவதற்கான கால அவகாசமே போர்நிறுத்தம் எனக் கூறினர். ஆகையினால் கடந்த வருடம் முழுவதும் பேச்சுவார்த்தை இடம்பெறுவதானால் போர் நிறுத்தம் இன்றியும் பொருளாதாரத்தடை நீக்கப்படாமலுமே நடைபெற வேண்டும் என அரசாங்கமும் இராணுவமும் விரும்பியிருந்தன.

இதன் அடிப்படையில், போர்நிறுத்தம் செய்யப்படுவதையும், பொருளாதாரத் தடை நீக்கத்தையும் வன்மையாக எதிர்த்தனர். பொருளாதாரத் தடை நீக்கம் இராணுவ ரீதியாக விடுதலைப் புலிகளுக்குப் பெரிதும் உதவும் எனவும், அவர்களின் நகரும் திறன் அதிகரிக்கும் என்றும் தெரிவித்தனர். இதன்மூலம் உருவாகிவந்த சமாதானச் சூழலையும் கெடுத்தனர். இதனால் சமாதானம், பேச்சுவார்த்தை தொடர்பான முயற்சிகளை மேற்கொண்டவர்களும் கைவிட்டனர்.

ஆனால் இன்று நிலைமையோ தலைகீழாகவுள்ளது. விடுதலைப் புலிகள் போர்நிறுத்தமோ, பொருளாதாரத் தடை நீக்கமோ செய்யாமல் பேச வருவது அவர்களுக்கு அச்சத்தைக் கொடுத்துள்ளது. ஆனால், இதனை அச்சம் எனக் கூறுவதை விட பயப்பீதி என்று கூறுவதே பொருத்தமாகும்.

இதற்குக் காரணமும் இல்லாமல் இல்லை. விடுதலைப் புலிகள் இயக்கம் முன்னரை விடத் தற்பொழுது பலமாக இருக்கின்றது என்பதே இதற்குக் காரணமாகும். இந்நிலையில், பேச்சுவார்த்தை ஒருபுறம் நடந்து கொண்டிருக்கையில் மறுபுறம் யுத்தநிறுத்தம் இல்லாத நிலையில் விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தினால்எவ்வாறு சமாளிப்பது என்பதே தற்பொழுதுள்ள அம்சமாகும். இதுவே அவர்கள்சந்தேகத்திற்கு காரணமும் ஆகும்.

அதாவது, ஒப்பரேசன் யாழ்தேவி, பூநகரி முகாம் மீதான தாக்குதல்கள் சிறிலங்கா இராணுவத்திற்கு அச்சத்தை அளித்து விட்டது என்பதே உண்மையாகும். இதுவே அவர்களின் தலைகீழான கொள்கை மாற்றத்திற்கும் காரணமாகும். இவ்வுணர்வே யாழ் அரச அதிபரிடம் யுத்தநிறுத்தம் மேற்கொள்ளப்பட்டு சமாதானப் பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட வேண்டும் என இராணுவ அதிகாரிகளைப் பேசத் தூண்டியதும் ஆகும்.

---

சிறிலங்கா இராணுவத்தின் அதியுயர் கௌரவ விருதான வீரவிக்கிரம விபூஷணய என்ற விருதை காலஞ்சென்ற டென்சில் கொப்பேகடுவவிற்கும் விஜயவிமலரட்ணவிற்கும் வழங்க பாதுகாப்பு அமைச்சு மறுத்துவிட்டது.

இது பற்றித் தெரியவருவதாவது: விருதுகள் வழங்கும் சபையின் தலைவராக உள்ள ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரியான மேஜர் ஜெனரல் திலக்பரணகம அராலி கண்ணிவெடியில் கொல்லப்பட்ட கொப்பேகடுவவிற்கும் விஜய விமலரட்ணவிற்கும் மேற்படி இராணுவ உயர் கௌரவ விருதை வழங்க சிபார்சு செய்திருந்தார். இதனை ஏற்றுக்கொள்ள பாதுகாப்பு அமைச்சு மறுத்துள்ளது அப்போது கொப்பேகடுவவின் கீழ் இருந்த, தற்போது மூத்த இராணுவ அதிகாரிகளாக இருக்கும் சிலர் இவ் விருதுக்கு கொப்பேகடுவ தகுதியற்றவர் என கண்டனம் செய்திருந்ததும் கொப்பேகடுவ சிறிமாவோ பண்டாரநாயக்காவின் உறவினர் என்பதும் பாதுகாப்பு அமைச்சின் இம் மறுப்பிற்குக் காரணம் என கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதே சமயம் விருதுகளுக்காக சிபார்சு செய்யப்பட்டவர்கள் தொடர்பாக ஏதும் திருப்தியின்மை இருப்பின் அதுபற்றி தமக்கு அறிவிக்கலாம் என இராணுவத் தளபதி தனது அதிகாரிகளுக்கு அறிவித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

---

தொடர்பாக வடகொரியா மீது தடை நடவடிக்கை விதிக்கும் அமெரிக்கத் திட்டத்தை சீனாவும் ரஷ்யாவும் எதிர்த்ததையடுத்து அத்திட்டம் தடைப்பட்டுள்ளது.

இப்பிரச்சினையை விவாதிக்க ஐ. நா பாதுகாப்பு சபை சரியான. இடமல்ல சம்பந்தப்பட்ட தரப்பினருடன் தான் [...]டும் வலியுறுத்தியுள்ளது வடகொரியாவுடனான தனது பாதுகாப்பு ஒப்பந்தத்தை தாம் தொடர்ந்து பேணுவதாகவும் சீனா கூறியுள்ளது.

வடகொரியா தனது அணு ஆலைகளை பார்வையிட தொடர்ந்து மறுத்து வருவது குறிப்பிடத்தக்கது.

---

# ஐ.தே.க. கைப்பற்றினால் சபையைகலைத்துவிடுவோம்

## - வடமேல் மாகாணசபை அமைச்சர்

(கொழும்பு)

வடமேல் மாகாணசபையில் தற்போதைய ஆட்சி மாற்றப்பட்டு ஆட்சிப்பொறுப்பு ஐக்கிய தேசிய கட்சியிடம் ஒப்படைக்கப்பட்டால் அதனை ஒரு மாதத்திற்குள் தான் கலைப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக அம் மாகாணசபை அமைச்சர் ஒருவர் லங்காதீப பத்திரிகைக்கு தெரிவித்துள்ளார்.

வடமேல் மாகாணசபையின் பொதுஜன ஐக்கிய முன்னணியின் உறுப்பினரும், கல்வி அமைச்சருமான எஸ். நாகொட மேற்படி தெரிவித்துள்ளார். அவர் தொடர்ந்து தெரிவிக்கையில் தற்போது நடைபெறும் அரசியல் மாற்றங்கள் இதனையே காட்டுவதாகவும் எனவே மாகாணத்தில் ஆட்சி கைமாற்றப்பட்ட நிலை ஏற்பட்டால் நிச்சயமாக மாகாணசபை கலைக்கப்படும். இதில் எந்தவொரு மாற்றமும் கிடையாது என தெளிவாக தெரிவிக்கின்றார்.

# அமரர் துரைராசாவிற்கு விஞ்ஞான கலாநிதி பட்டம்

## கொழும்பு திறந்த பல்கலைக்கழகம் வழங்கியது

(கொழும்பு)

கொழும்பு திறந்த பல்கலைக்கழகத்தின் ஏழாவது பட்டமளிப்பு விழா நேற்று மாலை கொழும்பு பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டுமண்டபத்தில் நடைபெற்றது.

காலஞ்சென்ற யாழ் பல்கலைக்கழக முன்னாள்உபவேந்தரும், திறந்த பல்கலைக்கழக பொறியியல் தொழில்நுட்ப பீடத்தலைவருமான பேராசிரியர் அ. துரைராசாவுக்கு மரணத்திற்கு பிந்திய விஞ்ஞானக் கலாநிதி பட்டம் வழங்கப்பட்டது. அத்துடன் பிரிட்டனின் திறந்தபல்கலைக்கழக உபவேந்தர் ஜோன்டானியல், கனடா அதபஸ்கா பல்கலைக்கழக தலைவர் கலாநிதி ரெரன்ஸ் மொறிஸ் ஆகியோரும் கௌரவப்பட்டங்களைப் பெற்றுக்கொண்டனர்.

# உலக கோப்பைக்கான கால்பந்தாட்டம் ஆரம்பம்

(வாஷிங்டன்)

உலக கோப்பை கால்பந்து போட்டிகள் நேற்று நாளிரவு அமெரிக்காவின் சிக்காகோவில் ஆரம்பித்தது. 24 நாடுகள் பங்குபற்றும் இந்த போட்டிகள் அடுத்த மாதம் 17ஆம் திகதி வரை நடைபெறும்.

உலகக் கோப்பை கால்பந்து வரலாற்றில் இம்முறை முதற்தடவையாக போட்டிகள் அமெரிக்காவில் நடைபெறுகின்றன. முதல் ஆட்டத்தில் தற்போதைய சாம்பியன் ஜேர்மனியும், பொலிவியாவும் மோதுகின்றன.

## பாதுகாப்பு ஏற்பாடு தொடரும்

(புதுடில்லி)

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின் குடும்பத்தினருக்கான சிறப்பு பாதுகாப்பு ஏற்பாடு இந்த ஆண்டு டிசம்பர் மாதத்திற்குப் பின்பும் தொடரும் என்று இந்திய அரசு அறிவித்துள்ளது

## அடுத்த மாதம் 4லீ. மண்ணெய்

(யாழ்ப்பாணம்)

ஜூலை மாதத்தில் குடும்பம் ஒவ்வொன்றிற்கும் நான்கு லீற்றர் மண்ணெய் வழங்கப்படும் என உதவித் திட்டப் பணிப்பாளர் திரு. மகாலிங்கம் தெரிவித்துள்ளார்

இந்த மாதம் குடும்பம் ஒன்றிற்கு மூன்று லீற்றர் வீதம் மண்ணெண்ணெய் வழங்கப்படும் என அவர் தெரிவித்தார்

மாகோ கப்பலில் எடுத்துவரப்பட்ட மண்ணெண்ணெயில் ஒரு பகுதியை விவசாயத் தேவையை கருத்தில் கொண்டு மேலதிகமாக வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது என அவர் மேலும் குறிப்பிட்டார். (தி)

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

1994.0[illegible].18.

### சனி இரவு

08.01- அறிவியற்கலசம்
08.10- தாயகப் பாடல்கள்
08.25- நேயர் கடிதங்கள்
08.30- செய்திகள்
08.40- சித்திரம்- ''விலங்குடைப்போம்''

1994.06.19.

### ஞாயிறு காலை

07,02 - மாவீரவணக்கம்
07.15 - களத்தில் மலர்ந்தவை
07.30 - செய்திகள்
07.35 - பத்திரிகைச் செய்திகள்
07.40 - தாயகப் பாடல்கள்

## 15,000 பீப்பா மண்ணெய் யாழ். குடாவிற்கு அனுமதி

(யாழ்ப்பாணம்)

என்றும் இல்லாத அளவில் யாழ். மாவட்டத்திற்கு பெருமளவிலான மண்ணெண்ணெய்யை அனுப்பி வைப்பதற்கு பாதுகாப்பு ஒருங்கிணைப்புக்குழு அனுமதி வழங்கியுள்ளது.

1990 ஜூன் மாதத்தின் பின்னர் இப்பகுதியில் ஏற்பட்ட யுத்தநிலையை அடுத்து பாதுகாப்பு அமைச்சு முதல் தடவையாக சுமார் பதினையாயிரம் பீப்பா மண்ணெண்ணெய் அனுப்புவதற்கு சம்மதித்துள்ளது.

அடுத்தமாதம், யாழ். செயலக புனர்வாழ்வுப் பகுதியினருக்கு 7250 பீப்பா மண்ணெண்ணெய்யும், தனியார் வர்த்தகர்களுக்கு 8000 பீப்பா மண்ணெண்ணெய்யும் அனுப்பி வைப்பதற்கு பாதுகாப்பு ஒருங்கிணைப்புக் குழு யாழ். அரசாங்க அதிபர் கா. மாணிக்கவாசகருக்கு அனுமதி அளித்துள்ளது.

நீண்ட காலத்திற்கு பின்னர், யாழ். மாவட்டத்திற்கு பெருமளவிலான மண்ணெண்ணெய் அனுப்பி வைக்கப்படுவது இதுதான் முதல் தடவை எனத் தெரிவிக்கப்பட்டது.

(தி)

## வீரவணக்க கூட்டம்

வலிகாமம் கோட்டம் கோப்பாய் வட்டத்தில் 6-ம் மாதங்களில் வீரச்சாவடைந்த மாவீரர்களுக்கான வீரவணக்கக் கூட்டம் இன்று இரவு 8 மணிக்கு நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது. கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும்.

## குறுகியகாலத்தில் கோடீஸ்வரராகிய 38படை, அரச ஊழியர்மீது விசாரணை

(கொழும்பு)

அரசாங்க சேவையில் இருந்தபோது திடீர் கோடீஸ்வரராக மாறிய முப்பத்தியெட்டுப்பேர் தொடர்பாக ''அல்னீஸ் ஆணைக்குழு'' விசாரணை நடத்த இருப்பதாக சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

பாதுகாப்பு அமைச்சுடன் தொடர்புடைய அதிகாரிகள் பலர் இவர்களில் உள்ளடங்குவதாகவும் இவர்களில் பதினெட்டுப்பேர் மிகவும் குறுகிய காலத்தில் இவ்வாறு கோடீஸ்வரராக ஆனதாகவும் அவ் வட்டாரங்கள் சுட்டிக்காட்டியுள்ளன.

## 'வாதுவ'வின் சேவை முற்றாக நிறுத்தம்

(யாழ்ப்பாணம்)

வாதுவ கப்பல்சேவை நிரந்தரமாக நிறுத்தப்பட்டுள்ளது என்று யாழ் செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. இக்கப்பலில் பொருள்கள் நிறைவாக ஏற்றி வருவதற்கு வர்த்தகர்களும் கூட்டுறவுச் சங்கங்களும் பின்னடிப்பதனாலேயே இந்த நிலை ஏற்பட்டது எனவும் தெரிவிக்கப்பட்டது.

இக்கப்பலில், கூட்டுறவுச் சங்கம் 50 வீதமும், வர்த்தகர்கள் 50 வீதமும் பொருள்கள் நிறைவாக ஏற்றிவருவது குறிப்பிடத்தக்கது.

வாதுவ கப்பலில் மொத்தம் 4000 மெற்றிக் தொன் பொருள்கள் ஏற்றிவர முடியும் எனக் கூறப்பட்டது.

நிறைவாக பொருள்கள் ஏற்றிவர தனியார் வர்த்தகர்களும், கூட்டுறவுச் சங்க நிர்வாகமும் நீண்டகாலமாக தயக்கம் காட்டி வருகின்றமையால், இச்சேவையை தொடர்ந்து நடத்த முடியாத நிலை ஏற்பட்டது என்று அவ் வட்டாரங்கள் மேலும் குறிப்பிட்டன. (தி)

## பங்கீட்டுக்கு சீனி

(யாழ்ப்பாணம்)

கொழும்பில் இருந்து புறப்பட்டுள்ள ''றுகுணு'' கப்பலில் 900 மெற்றிக்தொன் சீனியும் 60 மெற்றிக்தொன் தேயிலையும் எடுத்து வரப்படுவதாக யாழ். அரச அதிபர் தெரிவித்தார்.

எனவே எடுத்துவரப்படும் சீனி நிவாரணத்திற்கு விநியோகிக்கப்படும். சீனியின் விலையில் இருந்து ஒரு கிலோ இற்கு 4 ரூபா அதிகமாகும். எனவும் இச்சீனி வந்து சேர்ந்ததும் சகலருக்கும் பங்கீட்டு அடிப்படையில் விநியோகிக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

## ஆட்சியை பலப்படுத்தவே அமைச்சரவையில் மாற்றம்

### -பி, பி. ஸி மதிப்பீடு

இந்த ஆண்டின் பிற்பகுதியில் நடத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள ஜனாதிபதிதேர்தலுக்கு முன்பாக அரசைப் பலப்படுத்தும்நோக்கத்திலேயே அமைச்சரவை மாற்றம் செய்யப்படுவதற்கான முக்கிய நோக்கமாகும் இவ்வாறு பி. பி ஸியின் கொழும்பு முகவர் அமைச்சரவை மாற்றம் பற்றிய தமது குறிப்பில் கூறியுள்ளார்

அவர் மேலும் கூறுகையில், ஏற்கனவே இருக்கும் பாராளுமன்ற உறுப்பினர்களில் மூன்றிலிரு பகுதியினர் ஏதாவது அமைச்சரவைப் பதவியிலும் தொற்றிக் கொண்டிருக்கும் நிலையில் அமைச்சரவையில் மேலும் விரிவாக்கம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. தேசிய இணக்கம் காண்பதற்கான அமைச்சு, தனியார் மயமாக்கலுக்கான அமைச்சு எனப் புதிய அமைச்சுகளும் உருவாக்கப்பட்டுள்ளது. இவை ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட இருக்கும் டி. பி. விஜேதுங்கா பகைமைக் குழுக்களைச் சமாளிக்கவும், செல்வாக்கு மிக்க அரசியல்வாதிகளை ஈர்க்கவும் முயல்வதை எடுத்துக் காட்டுகின்றன. தேசிய இணக்கத்திற்கான அமைச்சு ஒன்று உருவாக்கப்பட்டிருப்பது சிறுபான்மையினர் வாக்குகளை கவரும் திட்டம் என்பதுடன் இவ் அமைச்சு காமினி திசாநாயக்காவிற்கு வழங்கப்படாமல் அநுரா பண்டாரநாயக்காவிற்கு வழங்கப்பட்டுள்ளமையானது எதிர்காலத்தில் தன்னுடன் போட்டியாளராக வரக்கூடிய எவரையும் வளரவிடுவதற்கில்லை என்ற டி. பி. விஜேதுங்காவின் எண்ணத்தைக் காட்டுகிறது எனவும் தெரிவித்தார்.

## வெளிநாட்டுப்

தால் பிரிவினைக்கான சூழ்நிலை உருவாகிவிடும் என்று விடுதலைப் புலிகளின் சார்பில் பேசிய கலாநிதி அன்ரன் பாலசிங்கம் தெரிவித்தார்.

சட்டம், ஒழுங்கு போன்றவற்றை கவனிப்பதுடன் மட்டும் புலிப்படையினர் தம்மை சம்பந்தப்படுத்திக் கொள்ளவில்லை.

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் மூலம் பல வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. எரிபொருளை சிக்கனமாக பயன்படுத்தும் அடுப்புகள், சிரட்டைக் கரியில் இயங்கும் மோட்டார்கள், என்பவற்றை அவர்கள் அறிமுகப்படுத்தியுள்ளனர்.

ஆயுதப் போராட்டம் என்பதை தாரக மந்திரமாகக் கொண்டுள்ள ஒரு இயக்கம் எதிர் காலத்திற்கான முதலீட்டில் இவ்வளவு ஆர்வம் காட்டுவது வியப்பைத் தருகிறது. வரண்ட கரையோரப் பகுதிகளில் காடுகள் மீள் வளர்ப்புத் திட்டங்கள் கூட செயற்படுகிறது. சுமார் முப்பது இடங்களில் மர நடுகைக்கான தாவர மற்றும் பதிபக் கூடங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

எதிர்காலம் தமதே என்ற தன்னம்பிக்கையின் அறிகுறி இது என்று எடுத்துக் கொள்ளக் கூடிய வகையில் தேக்கம் மரக் கன்றுகள் பராமரிக்கப்படுகின்றன. ஒரு தேக்கமரம் முதிர்ச்சி அடைய சுமார் எண்பது ஆண்டுகள் எடுக்கும். அந்த எண்பது ஆண்டுகளின் பின்னர் யார் ஆட்சியில் இருந்தாலும் இந்த தேக்கம் மரங்கள் முற்றுகைக்கு உள்ளான நிலையில் வாழும் யாழ்ப்பாண மக்களுக்கு மிகத் தேவைப்படும் ஆறுதலையும் நிம்மதியையும் வழங்கும் என்

## முக்கிய அறிவித்தல்

### தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்

### யாழ். மாவட்டம்

### பொதுச் சபைக் கூட்டம்

இடம்: புதிய விஞ்ஞானக் கல்விக் கழகம்
எழிலகம் முன்பாக - யாழ்ப்பாணம்.

காலம்: 20 - 06 - 94 திங்கட்கிழமை
பிற்பகல் 3. 30

தனியார் கல்வி நிறுவன ஒழுங்கு விதிகள் சம்பந்தமாக கலந்துரையாடல் நடைபெற இருப்பதால் அனைத்து தனியார் கல்வி நிறுவனங்களும், பிரத்தியேக வகுப்புக்களும் 20 - 06 - 94 திங்கள் பிற்பகல் 3. 00 மணிக்கு வகுப்புக்களை நிறுத்தி நிர்வாகிகள் அனைவரும் சமுகம் தந்து உங்கள் கருத்துக்களையும் தெரிவிக்கும்படி கேட்டுக்கொள்கிறோம்.

பொதுச் செயலாளர்
யாழ். மாவட்டம்

(சி-9825)

## 52மில்லியன் ரூபா பணம் கொழும்பிற்கு போகும்?

(வடமராட்சி)

யாழ். இலங்கை வங்கி இங்கிருந்து கொழும்புக்கு பணம் அனுப்பிவைக்க முயற்சி செய்து வருகிறது.

பருத்தித்துறை துறைமுகத்திலிருந்து இன்று காலை புறப்படவுள்ள 'மாகோ' கப்பலில் 52 மில்லியன் ரூபா பணத்தை அனுப்பிவைக்கவுள்ளதாக தெரியவருகிறது.

இதேபோன்று மக்கள் வங்கியும் இங்கிருந்து பணம் அனுப்பி வைக்க நடவடிக்கைகள் எடுக்கப்படுவதாகவும் அறியப்படுகிறது. (யோ)

## பொலிஸ்-முஸ்லிம் மோதல் ஐவர் பலியாகினர்

மட்டக்களப்பு மாவட்டம் வாழைச்சேனை பகுதியில் அடையாள அட்டைகளைப் பரிசோதித்துக் கொண்டிருந்த பொலிசாருக்கும், முஸ்லிம்கள் சிலருக்கும் இடையே ஏற்பட்ட மோதலைத் தொடர்ந்து ஐவர் பலியாகியுள்ளனர்.

இரண்டு முஸ்லிம் இளைஞர்களுடன் பொலிசார் வாக்குவாதம் தொடங்கியதாகவும் அது பின்னர் மசூதிக்கு வெளியே மோதலாக மாறியதாகவும் கூறப்படுகிறது. நேற்று இச் சம்பவம் இடம்பெற்றதாக இராணுவ வட்டாரங்கள் கூறியுள்ளன.

### என்னுடன்

விஜேதாச தன்னுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு அமைச்சரவை மாற்றம் பற்றி அறிவித்தார் என்றும் தான் ஜனாதிபதியுடன் தொடர்பு கொள்ள விரும்புவதாக தெரிவித்ததாகவும் கூறினார்.

இதனைத் தொடர்ந்து இரவு 7. 30 தொடக்கம் 9. 30 மணிவரை ஜனாதிபதியுடன் தொலைபேசியில் தொடர்பு கொள்ள முற்பட்டதாகவும் ஆனால் ஜனாதிபதியுடன் தொலைபேசியில் தொடர்பு கொள்ள முடியாத ஒரு நிலை ஏற்பட்டதாகவும் இதனை தொடர்ந்துதான் இவ் அமைச்சை ஏற்பதில்லை என தீர்மானித்ததாகவும் தெரிவித்தார்.

மேலும் நிருபர் ஒருவரின் கேள்விக்கு பதில் தருகையில் தனக்கு உள்நாட்டலுவல்கள் அமைச்சர் பதவியைத் தான் ஜனாதிபதி தருவதற்கு முற்பட்டார் என்றும் தான் அதனை ஏற்காததைத் தொடர்ந்து அவரே அதனை ஏற்றுக்கொண்டார். எனவும் மேலும் அவர் தெரிவித்தார்.

### தொழில்

கப்பட்டிருந்ததாகவும் தொழிலாளர்கள் கொடுத்த தகவலைத் தொடர்ந்து இவ்வெடிகுண்டு இராணுவத்தின் வெடிகுண்டு செயலிழக்கச் செய்யும் பிரிவின் உதவியுடன் செயலிழக்கச் செய்யப்பட்டதாக

### அமைச்சரவை

அலுவிகாரவின் மகன் விசாரணை செய்யப்பட்டு வருகிறார். இக்கொலை தொடர்பான விசாரணைக்கு அலுத் அலுவிகாரவும் தேவைப்படலாம் என்பதனாலேயேஇவர் அமைச்சரவையில் இருந்து நீக்கப்பட்டதாக வேறொரு செய்தி தெரிவிக்கின்றது.

## இன்றைய நிகழ்வு

கொட்டடி மத்தி சிக்கன கடன் வழங்கும் கூட்டுறவு சங்க முதலாவது கடன் வழங்கும் விழா இன்று சனி மாலை 4 மணிக்கு கொட்டடி நமசிவாய வித்தியாசாலையில் நடைபெறும்.

## விண்ணப்பங்கள் குவிகின்றன

(யாழ்ப்பாணம்)

எழுதுவினைஞர்களை ஆட்சேர்ப்பதற்கான போட்டிப் பரீட்சைக்கு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் பெருமளவில் யாழ். செயலகத்தில் குவிந்துளன.

இதற்கான விண்ணப்பங்கள் நேற்றும் நேற்று முன்தினமும் மொத்தம் 4000 க்கும் அதிகமாக வந்துசேர்ந்துள்ளதாக யாழ். அரச அதிபர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் இவ் விண்ணப்பப்படிவங்கள் விசேடமாக ஒரு கப்பலில் எடுத்துச் செல்லதாம் ஏற்




## இதோ! ஓர் இனியஉதயம்

பல நாட் கனவு பலித்தது!

நீண்ட ஆரோக்கியத்தை வளர்க்க




நீண்ட ஆரோக்கியத்தை வளர்க்க

இயற்கை மூலிகைகள் சேர்க்கையில்

சர்வ ரோக நிவாரணி

# ‘நன்பானம்’

(கோப்பி தேனீருக்கான பிரதியீடு)

## சிறப்பம்சங்கள்

★ உடலுக்கு ஊட்டம்
★ நோய் தடுப்பு
★ தீங்கற்ற மூலிகைகளின் சேர்க்கை
★ நறுமணமும் இன்சுவையும்
★ தளராத உற்சாகம்

விநியோக நிலையங்கள் விரைவில் வெளிவரும்.

தயாரிப்பு முறை: சாதாரண கோப்பி தேனீர் தயாரிப்பது போன்றதே.

சித்த வைத்திய கூட்டுறவு சங்கம்

தயாரிப்பாளர்:

- சித்த வைத்திய கூட்டுறவுச் சங்கம் -

(சி-9824)

மூலிக்கச் செப்பப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### மந்திரி

தொடர்ந்தும் ஐக்கியதேசியக் கட்சியில் அங்கம் வகித்தவர் என்றும் முன்னாள் அமைச்சர்களில் ஒருவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இதேவேளை இவருக்கு ஒரு இராஜாங்க அமைச்சர் பதவி வழங்கப்படலாம் அல்லது அலுத்அலுவிகாரவுக்குவழங்க முன்வந்து அவர் ஏற்க மறுத்த அமைச்சு இவருக்கு வழங்கலாம் என தெரியவருகின்றது

### போதிய

பரவி வருகிறது,

மேலும் மூன்றாவது உலகில் சுமார் 20 லட்சம் பேர் எச், ஐ, வி வைரஸ் கிருமியினால் பாதிக்கப்பட்டுள்ளனர் 1980 களில் இதன் நேரடி மற்றும் மறைமுக செலவு 21,000 கோடி அமெரிக்க டொலர்களாக இருந்ததாக மானிட அபிவிருத்தி சபையின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (05)

யாழ். ஸ்ரீதரில்

Aronold Schwarzenegger நடித்த

PREDATOR

தினசரி

மாலை 4, 6மணி

சனி ஞாயிறு

காலை 10.30 மணி

மாலை 4, 6மணி

(சி- 9822)

எடுத்துச்செல்ல தாம் ஏற்பாடு செய்துள்ளதாக தெரிவித்தார். (பா) (தி)

நிழலையும் வழங்கும் என்பதில் ஐயமில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

## மரண அறிவித்தல்கள்

### வயிரவப்பிள்ளை காசிநாதன் வள்ளியம்மாள்

பொலிகண்டியைச் சேர்ந்த காலஞ்சென்ற ஓய்வு பெற்றஆசிரியர்வயிரவப்பிள்ளை,காசிநாதன்அவர்களின் அன்புமனைவிவள்ளியம்மாள்நேற்றுகாலமாகிவிட்டார். இவர் சிவலிங்கம், தர்மலிங்கம், பவானி, சகுந்தலா தேவி ஆகியோரின் அன்புத் தாயாரும், செல்வராணி, பகவதி, சற்குணராசா ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 18 - 6 - 1994 சனிக்கிழமை காலை 10 மணிக்கு ஊறணி மயானத்தில் நடைபெறும்.

தகவல்:
பவானி சற்குணராசா
(சட்டத்தரணி) (மகள்)

(8599)

### முத்துவேலு ஸ்ரீபதிநாதன்

சுதுமலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஸ்ரீபதிநாதன் (டைமன் கற்பூர உரிமையாளர்) அகால மரணம் அடைந்துள்ளார் இவர் காலஞ்சென்ற முத்துவேலு பாறுவதிப்பிள்ளையின் அன்பு மகனும், இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும், சுகந்தி, கோபிநாத் (டொக்டர்), சுசீபா ஆகியோரின் அன்புத் தந்தையும், காமராஜ் (வினாயகர் ஸ்ரோர்ஸ் முருகண்டி, ஜீவன் கபே இரணைமடு) ஜெயராம், வாசுகி (ஆசிரியை) ஆகியோரின் மாமனாரும், சஞ்ஜீவன், ஸ்ரீநாத், ஸ்ரீராம் ஆகியோரின் பேரனும், முருகேசபிள்ளையின் பெறாமகனும் ஆவார். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றேன்.

தகவல்:
ஸ்ரீ. இராஜேஸ்வரி
(மனைவி)

சுதுமலை மேற்கு,
மானிப்பாய்.
டைமன் கற்பூரம் (8592)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31 ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1994 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 18 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.